Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2 மதுரை

# ஈழநாடு

EELA NADU

போன் 389 | National TAMIL DAILY | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம் | பிலவ | தை 21 ஆம் நாள் ஷஃபான் 27 | (3-2-62) | சனிக்கிழமை | இதழ் 305

*சதித்திட்டம்*

# காணிப் பகுதி உதவி

## டைரக்டர் கைது

### மற்றோர் உதவி பொலிஸ் சுப்ரீண்டனும் கைதானார்

### இதுவரை மொத்தம் 16 பேர்

கொழும்பு, வெள்ளி

**அரசாங்கத்தை வீழ்த்த சதிசெய்ததாக இதுவரை மொத்தம் 16 பேர்கைதுசெய்யப்பட்டனர்.**

காணி அபிவிருத்திப் பகுதியின் துணை டைரக்டர் திரு. டி. ஜே. எப். டி. லியனகேயும், உதவி பொலிஸ் சுப்ரீண்டன் திரு. டி. வி. விஜயதுங்காவும் கைது செய்யப்பட்டதாக இன்று அறிவிக்கப் பட்டது.

1940-ம் ஆண்டு சிவில்சேவையில் சேர்ந்த திரு. லியனகே பல கச்சேரிகளில் கடமையாற்றிய பின் அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய இடங்களில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார். 1950-ம் ஆண்டு திரு லியனகே இ. போ. ச.வின் உதவி ஆபரேஷன் மானேஜராக நியமிக்கப்பட்டார். அதன்பின் வீடமைப்பு அமைச்சிலும், பல மாவட்டங்களின் உதவி அரசாங்க அதிபராகவும் கடமைபுரிந்தார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சிறிது காலத்துக்குப் பின்னர் திரு. லியனகே காணி அபிவிருத்தி இலாகாவின் உதவி டைரக்டர் பதவிக்கு மாற்றம் செய்யப்பட்டார்.

---

## “உடனே அம்மைப்பால் கட்டுவியுங்கள்”

### யாழ்ப்பாணம் மேயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

“தினமும் கொழும்புப் பகுதியிலிருந்து மக்கள் யாழ்ப்பாணம் வருகிறார்கள்; பெரியம்மையும் வர வசதியுண்டு. தயைசெய்து அம்மைப்பாலை உடனே கட்டுவியுங்கள்” என்று யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அம்மை பால்கட்டும் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. இங்குள்ள அரசாங்க ஊழியர்களில் அதிகமானவர்களுக்கு அம்மைப் பால் கட்டும்வேலை அவர்கள் காரியாலயங்களிலேயே நடைபெற்று வருகின்றன. இவர்களின் வேண்டுதலின் பேரிலேயே இவ்வாறு நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்தில் அம்மைப்பால் கட்டும் வேலை ஆஸ்பத்திரியிலும், சுகாதாரக் கந்தோரிலும், மாநகர சபையிலும் நடைபெறுகின்றது.

மேயர் தமது வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது:-

நமது நாட்டில் தற்போது கொழும்புப் பகுதியில் கொடிய பெரியம்மை தோன்றியிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

பெரியம்மை நம்மைச் கொல்லும் சக்தியுடையது. அது நம்மைக் கொல்லாமல் விட்டாலும் குருடராக்கி அங்கவீனராக்கி வாழ்நாள் முழுவதும் நடைப்பிணங்களாக அவதியுறச் செய்துவிடும்.

பெரியம்மையைத் தடுப்பதற்கு ஒரே ஒரு வழி அம்மைப் பால் கட்டுவித்தலாகும் தினமும் கொழும்புப் பகுதியிலிருந்து மக்கள் யாழ்ப்பாணம் வருகிறார்கள். பெரியம்மையும் வர வசதியுண்டு தயைசெய்து அம்மைப்பாலை உடனே கட்டுவியுங்கள்.

---

## மரம் ஒன்று ரூ. 10 லட்சம்!

சென்னை, பெப். 2

தமிழ்நாட்டிலுள்ள சத்தியமங்கலத்தில் 125 டன் சந்தனமரம் ஒன்று ரூ. 10,65,000க்கு ஏலத்தில் விற்கப்பட்டது. அதாவது டன் ஒன்றுக்கு ரூ. 852 0ரூபாய்!

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விசேஷ ஆராதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாப்பாணம் இந்துக் கல்லூரியின் சைவ இளைஞர் கழகத்தின் சார்பில் இன்று காலையில் ஒரு விசேஷ ஆராதனை நடைபெறறது. அஷ்டகிரகச் சேர்க்கையினால்ஏற்படும் தீமைகளிலிருந்து உலகினைக் காக்க வேண்டுமென்று இறைவனுக்குச்செய்த இந்த விசேஷ ஆராதனையில் கல்லூரிமாணவர்களே கூட்டுப் பிரார்த்தனையும் செய்தனர்.

---

## வர்த்தக வங்கிகள் தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

வேலைநிறுத்தம் செய்துவரும் வங்கி ஊழியர்களுக்கு வேலைநீக்க நோட்டீஸ் வழங்குவதற்கு கைத்தொழில் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருப்பதாய், வர்த்தக வங்கிகள் தங்கள் ஊழியர்களுக்குத் தெரிவிக்க முடிவுசெய்துள்ளன.

ஆனால் ஊழியர்கள் வேலைக்குத் திரும்புவதின் மூலம் தங்கள் குடும்பத்துக்கும், நாட்டுக்கும் கஷ்டம் ஏற்படுவதைத் தவிர்ப்பார்கள் என நம்புவதாயும் வங்கிகள் அறிவித்துள்ளன.

---

## துறைமுக வேலை நிறுத்தம் முடிவடையும் அறிகுறி!

### தொழில் மந்திரியுடன் யூனியன்கள் சந்திப்பு

கொழும்பு, வெள்ளி

**தொழில் மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து 11துறைமுக யூனியன்கள் இன்று காலை கூடி ஆலோசித்தன.**

நேற்று மாலை யூனியன்கள் தொழில் மந்திரியைச் சந்தித்து சில யோசனைகளைத் தெரிவித்ததாயும், மந்திரி சபைக்கு அந்த ஆலோசனைகளைத் தெரிவிப்பதாக மந்திரி அதற்குப் பதிலளித்தாரென்றும் தெரிகிறது.

யூனியன்கள் தாங்கள் கூட்டம் நடத்தியபின் மந்திரியுடன் தொடர்பு கொள்ளுமென்றும் அதன் விளைவாக வேலை நிறுத்தம்பற்றி ஒரு முடிவு ஏற்படக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் “லங்கா கம்கரு சங்க”த்தைச் சேர்ந்த 90 தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டதாகக் கூறுப்படுகிறது. மொத்தம் 728 தொழிலாளர்கள்வேலைக்குத்திரும்பியிருப்பதாக அரசாங்கத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்றுத் துறைமுகத்தில் 4911 டன்பண்டங்கள் இறக்குமதி செய்யப்பட்டதாயும், 1600 டன் ஏற்றுமதி செய்யப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

10 துறைமுக யூனியன்கள் வேலைக்குத் திரும்ப முடிவு செய்துள்ளன. லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த ஐக்கிய துறைமுகத் தொழிலாளர்சங்கக் கமிட்டி இன்று கூடியபின் விடுத்த ஒரு அறிக்கையில், ஏற்கெனவே சில யூனியன்கள் வேலைக்குத் திரும்பியுள்ளதாலும், வேலைநிறுத்தம் 5 தினங்கள் நீடித்ததாலும் இங்கிலையில் தொழிலாளரின் கட்டுப்பாடு பாதிக்கப்படாமலிருக்கும்முகமாகவும் தங்கள் அங்கத்தினர்களை வேலைக்குத் திரும்புமாறு பொதுச்சபைக்கு சிபார்சு செய்வதென தீர்மானித்துள்ளதாய்க் கூறப்பட்டுள்ளது.

---

## ஸ்ரீமதி கென்னடி

புதுடில்லி, பெப். 2

மார்ச் 3-ம் திகதி இந்தியா வரும் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி ஸ்ரீமதி கென்னடி, பிரதமர் நேருவின் இல்லத்தில் தங்கியிருப்பார். போலிஷ் இளவரசரை மணந்துள்ள ஸ்ரீமதி கென்னடியின் சகோதரியும் அவருடன் வருவார். இருவரும் நேருஜியின் வீட்டில் ஹோலிபண்டிகையில் கலந்து கொள்வார்கள். ஸ்ரீமதி கென்னடி 17 நாள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

---

## முதலை பிடிக்கும் லைசன்ஸ் ரத்து

சென்னை, பெப். 2

தமிழ்நாட்டில் முதலை பிடிக்கும் லைசன்ஸ்கள் உடனடியாக ரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

---

## தூதுகோஷ்டி நாடு திரும்பியது

கொழும்பு, வெள்ளி

பர்மாவில் நடைபெற்ற ஆசிய–ஆபிரிக்க சட்ட மகாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப்பிரதிநிதிகள் இன்று நாடு திரும்பினர்.

---

## மிருகக்காட்சிசாலையின் புதிய டைரக்டர்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மிருகக்காட்சிச் சாலையின் புதிய டைரக்டராக திரு. டி. டபிள்யு. எல். ஈ. டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார். குத்துவிளக்கேற்றிய சிறு வைபவத்துக்குப் பின்னர் திரு. அல்விஸ் தமது பதவியை பொறுப்பேற்றார்.

முன்னர் டைரக்டராகவிருந்த மேஜர் ஒப்ரேவெயன்மான் இம்மாதம் 15-ம் திகதி மலாயா செல்வார்.

---

## கிரிக்கெட்

கராச்சி, பெப். 2

இங்கிலாந்துக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்றுவரும் 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல் நாளான இன்று, பாகிஸ்தான் 253 ரன்களுக்கு முற்றாக “அவுட்” ஆனது.

---

**ஈழநாடு**

**4 – 2 – 62 வாரப் பதிப்பில்**

★ எனது ஐயா:
பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்

★ இந்திய நாட்டியக் கலை:
கலை விமர்சகர் இ. கிருஷ்ண ஐயர்

★ முழுமை: சிறுகதை
ஜோர்ஜ் சந்திரசேகரன்

★ அஷ்ட கிரக மகாநாடு

★ விஞ்ஞானிகளின் கடலாராய்ச்சி

★ உலகமேடை ★ மகளிர் மன்றம்
★ சிறுவர் பூங்கா ★ கலை அரங்கம்

வேறும் பல சுவையான அம்சங்கள்

# பலம்பொருந்திய எதிர்க்கட்சி

## சட்டமன்றங்களில் கவிஞர் குரல்!

தமிழகத் தேர்தலில் ராஜ்ய சட்டசபைக்கும் மத்திய பாராளு மன்றத்திற்கும் ஒவ்வொரு தொகுதியிலும் முடிவாக எக்கட்சி போட்டிபோடுகிறது.. யார் யார் போட்டிபோடுகிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. இனிவாக்காளர்களுடைய தீர்ப்பைத்தான், தேர்தலிற் போட்டிபோடும் கட்சிகளும், அபேட்சகர்களுமேயன்றி நாடுமுழுவதுமே எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஓர் அரசாங்கத்துக்கு அமைச்சரவை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு எதிர்க் கட்சியும் முக்கியமானது. ஆளுங்கட்சியைப்போல. எதிர்க்கட்சியும் அரசாங்கத்தில் ஒரு முக்கிய அங்கமாகும். மந்திரிசபை நாட்டை ஆட்சி புரிந்து மக்களுக்கு நன்மை புரிவதற்கு எதிர்க்கட்சியும் உறுதுணையாக இருக்கவேண்டியது அவசியம்.

இம்மூன்றுவது பொதுத் தேர்தலில் தமிழகத்தைப் பொறுத்தவரை, ஆளுங்கட்சி தவிர, 12 கட்சிகள் தத்தம் அபேட்சகர்களை நிறுத்தி வேலைசெய்கின்றன. அவை தத்தம் சார்பில் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றுவந்தால் இன்ன இன்னது செய்வோம் என்று, சாத்தியமானவை மட்டுமல்லாமல் சாத்தியமற்ற வாக்குறுதிகளையும் கூறியிருக்கின்றன. "ஆளுங்கட்சியை எதிர்த்து முறியடிக்க முயலுவோம். அதற்காகவே எங்களுக்குள் கூட்டுச் சேர்வோம்" என்று சொல்லிவந்தனர். ஆனல் அவர்களுக்குள் ஓரணியில் நிற்கக்கூடியஒற்றுமை ஏற்படவில்லை. பலமுனைகளாக நின்றுதான் சக்தியைச் சிதறடித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆட்சி சுதந்திரங் கிடைத்தவுடனே ஏற்பட்ட பாராளுமன்றத்திலும், சட்ட சபைகளினிலும், முதல் பொதுத் தேர்தல் நடந்தபின் அமைந்த பாராளுமன்றத்திலும், சட்டசபைகளிலும், கம்யூனிஸ்டுகளும், பிரஜா சோஷலிஸ்டுகளும் மிகச் சிலராகவே வந்திருந்தாலும் ஓரளவு சரியான எதிர்க்கட்சியாக இயங்கினர். இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்து முடிந்த பின்னர் தமிழ் ராஜ்யச் சட்டசபையில், ஆளுங்கட்சியைச் சரியானபடி அதட்டிக் கேட்கக்கூடிய எதிர்க் கட்சியே ஏற்படவில்லை. அரசியல் ஞானமும், பேசுந் திறனும் உடைய ஒருசிலர் மட்டுமே அவ்வப்போது சந்தடி செய்துகொண்டிருந்தனர். காங்கிரஸை விட்டுப பிரிந்தவர்கள் அமைத்த ஜனநாயகக் காங்கிரஸ் உறுப்பினரும் தி மு. க. உறுப்பினரும் ஒன்றுசேர்ந்தும் உருப்படியாக எதிர்ப்பைக் காட்டி, அரசாங்கத்தை வேலைவாங்கவில்லை. தமிழகத்திலுள்ள 12 கட்சிகளில் ஆளுங்கட்சியைப்போல் எல்லாத் தொகுதிகளுக்கும் அபேட்சகர்களை நிறுத்தக்கூடிய அளவுக்கு, எதிர்க்கட்சி எதுவுமே வளரவில்லை. நாங்கள் ஆளுங்கட்சியை வீழ்த்திவிட்டு மாற்று அரசாங்கம் அமைப்போம் எனத் துணிந்து இவைகள் கூற

## தமிழகமும் பொதுத்தேர்தலும்

முடியவில்லை. தேர்தலின் பின் ஏற்படும் நிலையில் எதிர்க்கட்சிகள் கூட்டுச் சேருமா? நல்ல எதிர்க்கட்சி தோன்றுமா? என்பது இப்பொழுது சொல்வதற்கில்லை.

### கவிஞர் பாரதிதாசன் அறிக்கை

இந்திய பொதுத் தேர்தலில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் ஆகியோர் போட்டியிடுகிறர்கள் என்பது தெரிந்ததே! ஆனல் இப்பொழுது ஆட்சிமன்றங்களில் கவிஞர்களின் குரல் ஒலிக்கவேண்டும் என்று தமிழகத்திலிருந்து ஒருகுரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தி. மு. க. வின் பழம்பெரும் கவிஞர் என்பது தெரிந்ததே! அவர் ஓர் அறிக்கையில் பின்கண்டவாறு கூறியிருக்கிறர்:-

இன்றைய தமிழ்நாட்டில் மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் மிக்க வாலிபர்கள் பெருகிவருகிறர்கள்.! தமிழ்மொழியில் சிறந்த கவிஞர்கள் இருக்கிறர்கள். இந்தக் கவிஞர்கள் அனைவரையும் சாதி, மத, கட்சிவேறுபாடின்றி கூட்டி, கவிஞர் மன்றம் அமைத்து நல்லமுறையில் நாட்டுக்கும்,மொழிக்கும் தொண்டாற்றிச் செயல்படுமாறு அழைக்கின்றேன். அறிவும், உணர்ச்சிப் பெருக்கமும் உள்ள கவிதைகள்(பாட்டுகள்) மனித சமுதாயத்தில் புதிய திருப்பத்தை உண்டாக்கும். நகர சபைகளிலும், சட்டசபைகளிலும் நமது (கவிஞர்களது) குரல் ஒலிக்கப்படவேண்டும்! இதற்காக ஆக்க வேலைகளைச் செய்ய இன்னும் ஒரு வாரத்தில் ஒரு குழு அமைக்கப்படும்.

### வானொலி வசதி கைவிடப்பட்டது?

வரும் பொதுத் தேர்தலில், பிரதான அரசியற் கட்சிகளுக்கு ரேடியோ ஒலிப்பதிவு வசதியளிக்கும் யோசனையை தேர்தல் கமிஷன் கைவிட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. வாக்காளர்களுக்குத் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக ரேடியோவில் அரசியற் கட்சிகளுக்கு வசதிசெய்து தர கமிஷன் உத்தேசித்தது. ஆனல், கட்சிகளிடையே அது சம்பந்தமாக உடன்பாடு காணப்பட்டதால்,யோசனை கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. வானொலியில் தேர்தல் பிரசாரம் செய்வதற்கு பலத்த எதிர்ப்பும் அதேவேளையில் கட்சிகளுக்கிடையே முரண்பாடும் இருந்துவருவது தெரிந்ததே. மேற்கண்டமுடிவு சரியாக ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

### காங்கிரஸின் தோல்வி ஆண்டவன் கையில்:

'காங்கிரஸ் கட்சியின் தோல்வி இனிமேல் ஆண்டவன் கையில்தான் இருக்கிறது' என்று சுதந்திராக்கட்சித் தலைவர் ராஜாஜி வருத்தம் தெரிவித்துள்ளார்.' மற்றக் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்தாலாவது, காங்கிரஸை ஒழித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். ஆனல் என்னுடைய முயற்சி பழாய்ப்போய்விட்டது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாததால் கூட்டு சிதறிவிட்டது. காங்கிரஸை மனிதர்களால் தோற்கடிக்க முடியாத நிலையாகிவிட்டது. காங்கிரஸின் வெற்றி தோல்வியை ஆண்டவன் கையில் ஒப்படைத்துவிட்டேன். தேர்தல் நெருங்கிவிட்டது. ஆண்டவன் சரியான தீர்ப்புச் சொல்வான்." இவ்வாறு ராஜாஜி கூறியிருக்கிறர்.

### ஓய்வுபெறும் தபால் ஊழியருக்கு பாராட்டுபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

புத்தூர் தபால் நிலையத்தில் கடந்த 27 வருடகாலம் சேவை செய்து தமது 60 வது வயதில் ஓய்வுபெறும் திரு. கே. செல்லத்துரைக்கு புத்தூரில் ஓர் பாராட்டுபசாரம் அளிக்கப்பட்டது. இந்த உபசாரம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இவ்வைபத்தில் வாதரவத்தை, புத்தூர், தபால்நிலையங்களின் தலைவர்கள் ஊழியர்கள் ஆகியோரும் மற்றும் பிரமுகர் பலரும் கலந்து கொண்டனர். இதற்கு வாதரவத்தை உப தபால் நிலையத்தலைவர் திரு. கே. இரத்தினசபாபதி தலைமை வகித்தார்.

திரு. செல்லத்துரை கடந்த 27 வருடகாலமாக ஆற்றிய அருஞ்சேவையைப் பாராட்டிப் பலரும் பேசினர்- தமக்களிக்கப்பட்ட பாராட்டுதல்களுக்கு திரு. செல்லத்துரை நன்றிதெரிவித்துப் பேசினர். தேநீர் விருந்தொன்றும் சிறப்பாக நடைபெற்றது.

### பிரதமருக்கு பாராட்டுச் செய்தி

#### மகாசபைத் தலைவர் அனுப்பிவைத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்தவர்களை கண்டுபிடித்ததில் அரசாங்கம் எடுத்த நடவடிக்கை களுக்கு பிரதமருக்கும் மந்திரிசபைக்கும் பாராட்டுத் தெரிவித்து அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் மகாசபையின் சார்பில் ஓர் பாராட்டுச் செய்தியை இலங்கைப்பிரமருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் வழிபல் இறங்கியுள்ள பிற்போக்கு சக்திகளை களைகங்டுவதில் தனது ஒத்துழைப்பை எப்பொழுதும் அரசாங்கத்துக்கு உண்டு என்றும் அதில்கண்டிருக்கிறது.

## உங்கள் தினப்பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ வருடம் தை மாதம் 21-ந் திகதி சனிக்கிழமை (3-2-62) காலை 10-34 வரை திரயோதசி. அதன்பின் சதுர்த்தி. காலை 10-35 வரை பூராடம், பின்னர் உத்தராடம். சித்தயோகம். வர்த்தகத்திற்கு நல்லது. இன்று மாலை 4 மணி வரை 18 நிமிடம் 12 செக்கண்டில் எட்டுக் கிரக சேர்க்கை மகரத்தில் ஆரம்பமாகின்றது. நவக்கிரக தேவார பிரார்த்தனைகளும் இறைவழிபாடும் அவசியமாகும். நாளை அமாவாசையும் சேர்வதால் இல்லங்களில் இறைவழிபாடு நடத்துக.

### இன்று பிறந்தவர்களுக்கு

இத்தினத்தில் பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு நல்ல பலனும் கஷ்டபலனும் கலந்து வரும். முற்பகுதியில் தேகாரோக்கியம் குன்றுதல். பணக் கஷ்டம் ஆகியனவுடன் சிறு சிறு விபத்துக்களுக்கும் இடமுண்டு. பின்பகுதியில் நன்மைப்பேறுகள் காணப்படுகின்றன. புதிய தொழில்கள் சேர்க்கை, நலங்களபிவிருத்தி பண வரவு ஆதியன காணப்படுகின்றன. முற்பகுதியில் நிதானமும் பிற்பகுதியில் தெய்வ வழிபாடும் நன்மையாகும்.

#### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: பணநெருக்கடி, கவலை.

பரணி: பொருள் சேர்க்கை, குடும்ப கௌரவம்.

கார்த்திகை: காரிய நட்டம், சுகக்குறைவு.

ரோகிணி: கடன்வரவு, சஞ்சல நிவர்த்தி.

மிருகசீரிடம்: பிரயாணம், மனச்சந்தோஷம்.

திருவாதிரை: பிரயாணக் கஷ்டம், நண்பரால் தொல்லை.

புனர்பூசம்; முதியோர்நட்பு, தொழிற்சித்தி.

பூசம்: குடும்ப சௌகரியம், சுகம.

ஆயிலியம்: பிரயாணக் கஷ்டம், கடன்பயம்.

மகம்: நல்லவர்கூட்டு, காரிய சாதனை.

பூரம்: சுகமடைதல், மனத் திருப்தி.

உத்தரம: தாமதநிலை, மனத்தில் சஞ்சலம்.

அத்தம்: குடும்பசுகம், பெண்ணுதவி.

சித்திரை: குடும்பசுகம், மதிப்புயர்ச்சி.

சுவாதி: நலக்குறைவு, பணக்கஷ்டம்.

விசாகம்: மாதுருவர்க்க உதவி, தேகநலம்.

அனுஷம்: பெண்களால் தொல்லை, மனவருத்தம்.

கேட்டை: பணவரவு,நிம்மதி.

மூலம்: தொழிற்கஷ்டம்,பணமுடை.

பூராடம்: வர்த்தக நலன், மதிப்புயர்ச்சி.

உத்தராடம்: நல்லோர் சேர்க்கை, முயற்சிநலம்.

திருவோணம்: உழைப்பு வெற்றி, பணவரவு.

அவிட்டம்: வண்டி வாகன நன்மை, மனத்திருப்தி.

சதயம்: மனச் சஞ்சலம், கஷ்டம்.

பூரட்டாதி: பெரியோர்நேசம் கஷ்டநிவர்த்தி.

உத்தரட்டாதி: அனவசியச் செலவு, கஷ்டம்.

ரேவதி: நல்லநட்பு, சந்தோஷம்.

### நெடுந்தீவு கி. ச. இடைத் தேர்தல்

யாழ்ப்பாணம், திங்கள்

நெடுந்தீவு கிராமசபையின் 3ம் வட்டார இடைத்தேர்தலில் திரு. என். பெருமையினர் இன்று போட்டியின்றி அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### பொன்னலையில்

பொன்னலை வரதராசப்பெருமாள் கோவிலில் லட்சார்ச்சனையும், நவக்கிரகசாந்தியும் ஹோமமும் நடைபெற்று வருகிறது.

### நாவலர் நெடுஞ்செழியனும் சுதந்திராக்கட்சியும்

தஞ்சையில் தமது கட்சி போட்டியிடாதலால் தி. மு. க. அபேட்சகருக்கு (திரு. கருணநிதி) தங்கள் கட்சி ஆதரவளிக்கலாம் என்றும், ஆனல் திருவல்லிக்கேணி தொகுதியில் தங்கள் கட்சி அபேட்சகர் போட்டியிடுவதால் தி. மு. க. செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியனுக்கு ஆதரவு தருவதற்கில்லை என்றும் ராஜாஜி கூறியுள்ளார். திரு. கருணநிதியை எதிர்த்து சுயேச்சையாக போட்டியிடும் தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவரான திரு. சண்முகவடிவேலுவும் திரு. ராஜகோபாலாச்சாரியைச் சந்தித்து தமக்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு ராஜாஜி தனது ஆசீர்வாதத்தைத் தருவதாகவும் ஆனல் கட்சி ஜனநாயக அமைப்பில் கட்சியற்ற அபேட்சகருக்கு மதிப்பு ஏற்படுத்துவதற்கில்லை என்றும் தெரிவித்திருக்கிறர்.

### காணவில்லை

லோகநாதன் என்ற பெயருடைய எனது மகன் சுருட்டைத் தலைமயிருண்டு. சிவந்த மேனி. சிறு மீசையுண்டு. வயது 22 மட்டில் இருக்கும். காணமல் போனபொழுது சட்டையும் "லோங்ஸூம்" அணிந்திருந்தார் இவரைக்கண்டு பிடித்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த இனம் கொடுக்கப்படும்-விபரங்கள் தெரிந்தால் T. பாக்கியநாதன். கொக்குவில் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும்.

"போட் பிறிபெக்ஸ்" (Ford Prefect) EL 7503 நல்ல நிலைமையிலுள்ளது ஒருவரே பாவித்தது. விபரங்களுக்கு: 227, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் - கண்ணோட்டம்

மொத்த இடங்கள் 205 போட்டியிடுவோர் 793

| மாவட்டம் | தொகுதிகள் | காங். | தி. மு.க. | சுத. | கம். | பி. சோ. | சோ. | சோ. தொ. | த. தே.க. | பார் பிளா. | லீக். | நாம். தமி. | ஜன சங். | குடியரசு | சுயே. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | 10 | 10 | 9 | 8 | 1 | 1 | — | 1 | 2 | — | — | — | 2 | — | 9 | 43 |
| செங்கல்பட்டு | 14 | 14 | 8 | 5 | 1 | — | 1 | 3 | — | — | — | 2 | — | 1 | 19 | 54 |
| வடஆற்காடு | 20 | 20 | 18 | 7 | 3 | 1 | — | — | 1 | — | — | 2 | — | 3 | 30 | 85 |
| தென்ஆற்காடு | 19 | 19 | 16 | 9 | 4 | — | — | — | 1 | — | — | — | — | — | 13 | 62 |
| சேலம் | 23 | 23 | 20 | 7 | 3 | 1 | — | — | 3 | — | — | 4 | 1 | — | 22 | 84 |
| கோவை | 21 | 21 | 17 | 8 | 14 | 8 | 5 | — | — | — | — | — | — | — | 21 | 93 |
| நீலகிரி | 2 | 2 | 1 | 2 | 2 | — | — | — | — | — | — | — | — | — | 3 | 10 |
| மதுரை | 20 | 20 | 11 | 8 | 9 | 3 | — | 2 | — | 3 | — | — | 1 | — | 20 | 17 |
| திருச்சி | 19 | 19 | 16 | 8 | 3 | 1 | 1 | — | 1 | — | — | — | — | — | 19 | 68 |
| தஞ்சை | 20 | 20 | 14 | 7 | 13 | 3 | — | 1 | — | — | 2 | 1 | — | — | 12 | 73 |
| ராமநாதபுரம் | 14 | 14 | 3 | 9 | 4 | 1 | — | — | — | 3 | 1 | 1 | — | — | 15 | 49 |
| நெல்லை | 17 | 17 | 8 | 16 | 8 | 1 | — | — | — | — | 1 | 3 | — | — | 18 | 75 |
| கன்யாகுமரி | 6 | 6 | 1 | — | 3 | 1 | — | — | — | — | — | — | — | — | 9 | 20 |
| மொத்தம் | 205 | 205 | 142 | 94 | 68 | 21 | 7 | 7 | 8 | 6 | 4 | 13 | 4 | 4 | 210 | 793 |

திருச்சி மாவட்டம் அந்தநல்லூர் தொகுதிக்கான தேர்தல் மார்ச் மாதம் நடைபெறும். அந்தநல்லூர் இங்கு சேர்க்கப்படவில்லை.

# காஷ்மீர் பிரச்சினை-பாதுகாப்புச்சபை விவாதம்

## ஒத்திவைப்பு

## பீதியைப்போக்க ஒப்பந்தம் செய்யலாமே!

### பாகிஸ்தானுக்கு இந்திய பிரதிநிதி யோசனை

நியுயோர்க், பெப். 2

பாகிஸ்தானின் கோரிக்கைக்கிணங்க காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக நேற்றுக் கூடிய ஐ. நா. பாதுகாப்புச் சபை, இந்தியப் பொதுத் தேர்தல் முடிந்தபின் மீண்டும் விவாதிப்பதற்காக மார்ச் மாதம்வரை ஒத்திவைத்தது.

காஷ்மீர் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்ற பாகிஸ்தானின் கோரிக்கைக்கிணங்க பாதுகாப்புச் சபை, அதன் இம்மாதத் தலைவரான அமெரிக்கப் பிரதிநிதி திரு. அட்லாய் ஸ்டீவன்சனின் தலைமையில் நேற்றுக் கூடியது.

கூட்டத்தில் வாக்களிக்கும் உரிமையில்லாமல் இந்தியப் பிரதிநிதியும் பாகிஸ்தான் பிரதிநிதியும் கலந்துகொண்டனர்.

இந்தியப் பிரதிநிதி திரு. ஸி. எஸ். ஜா பேசுகையில், பாகிஸ்தானை இந்தியா தாக்குவதற்கு ஆயத்தம் செய்வதாக பாகிஸ்தான் பிரதிநிதி கூறியிருப்பதில் அர்த்தமில்லையென்றார்.

1957-ம் ஆண்டில் காஷ்மீர் பற்றி பாதுகாப்புச் சபையில் நடைபெற்ற விவாதத்தின் பின்னிருந்த நிலைமைக்கும் இப்பொழுதுள்ள நிலைமைக்கும் எவ்வித மாறுதலும் இல்லையென்றும் புதிதாக எதுவும் நடைபெறவில்லையென்றும் திரு. ஜா கூறினார்

இந்தியாவுக்கு எதிராக பிரசாரம் செய்வதற்கு பாதுகாப்புச் சபையை ஒரு அரசாங்கமாக உபயோகிக்க பாகிஸ்தான் விரும்புகிறது என்று திரு. ஜா குற்றம் சாட்டினார்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கும் இச்சமயத்தில் காஷ்மீர் பிரச்சினை பற்றி பாதுகாப்புச்சபை விவாதிப்பது இந்தியாவுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் பெரும் வசதிக்குறைவை ஏற்படுத்தும் என்று திரு. ஜா கூறினார்.

பொதுத தேர்தல் முடியும் வரை விவாதத்தை ஒத்திவைக்கவேண்டுமென்று திரு. ஜா கேட்டுக்கொண்டார்.

"பாகிஸ்தானை இந்தியா தாக்குமென்று உண்மையிலேயே பாகிஸ்தான் அஞ்சுவதாக இருந்தால், பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமுள்ள எந்தப் பிரச்சினைக்கும் போர் மூலம் தீர்வு காண்பதில்லையென்று ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டுமென்ற இந்தியப் பிரதமர் நேருவின் யோசனையை ஏற்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பாகிஸ்தான் முனவரலாமே!" என்று திரு. ஜா கூறினார்.

பாகிஸ்தான் பிரதிநிதி சேர் ஸபருல்லாகான் பேசுகையில் காஷ்மீர் விவகாரம் புதிய ஆபத்தான நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாகவும் அமைதியைக் குலைக்கக் கூடிய சூழ்நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## "அரசாங்கத்திடம் பணம் இல்லை"

பிங்கிரியா, வியாழன்

"அரசாங்கத்தின் பணப்பெட்டி காலி. கிராமப்புற மக்கள் கஷ்டத்தை எதிர் நோக்கிக்கொண்டிருக்கின்றனர். எம். பி. என்ற முறையில் நான் இதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்த நாட்டைச் செல்வம் கொழிக்கும் நாடாக்க அரசாங்கம் தீவிரமாக முயற்சி செய்து வருகிறதென்று நான் உறுதியாகக் கூறுகிறேன்" என்று பிங்கிரியா எம. பி. திரு. எல். பி. ஜயசேன ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## துறைமுக தொழிலாளர்-அமைச்சர் பேச்சுவார்த்தை

கொழும்பு, வெள்ளி

துறைமுகத் தொழிலாளர் யூனியன்களின் பிரதிநிதிகளை தொழில் தேசிய சேவைகள் அமைச்சர் திரு. எம். பி. டி. இஸட். சிறிவர்த்தன நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

சுமார் 50 பிரதிநிதிகள் கலந்துகொண்ட இப்பேச்சுவார்த்தைகளின்போது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பீ. குமாரசிங்காவும் தொழில் கமிஷனர் திரு. விங்கன் அபயவீராவும் சமுகமளித்திருந்தனர்.

துறைமுகத் தொழிலாளருக்கு மாதச்சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிகலை மீது எவ்வித பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தொழிலாளர்கள் வேலைக்குத்திரும்பவேண்டுமென்று பேச்சுவார்த்தைகளின் ஆரம்பத்திலேயே அமைச்சர் வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது,



இந்தியாவில் கனரக இயந்திரத் தொழில் அபிவிருத்தியில் உதவியளிக்கச் செல்லும் பர்மிங்காமைச் சேர்ந்த திரு. எட்மன்ட் டி. ஏ. பொனிஹாம் என்னும் நிபுணர் இவர்.

## இந்தோனேஷிய கைதிகளை விடுதலைசெய்ய சம்மதம்

நியுயோர்க். பெப். 2

சமீபத்தில் மேற்கு இரியன் கரையோரப் பகுதியில இந்தோனேஷிய பீரங்கிப் படகுகள்மீது டச்சுக் கப்பல்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த சமயத்தில் கைது செய்யப்பட்ட இந்தோனேஷியர்களை விடுதலை செய்ய டச்சு அரசாங்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தோனேஷியர்களை விடுதலை செய்யுமாறு ஐ. நா. பதில் தலைமைக் காரியதரிசி யு தாண்ட் டச்சு பிரதம மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

இக்கடிதத்துக்கு டச்சுப் பிரதமர் எழுதியுள்ள பதில் கடிதத்தில் கைது செய்யப்பட்ட இந்தோனேஷியர்களை விடுதலை செய்யச் சம்மதித்துள்ளதாகவும் இவர்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளைக் கவனிக்க ஐ. நா. பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறும் கேட்டுள்ளார்.

## 53 ஆபிரிக்கர் விடுதலை

போர்ட்எலிஸபெத், பெ. 2

எட்டுமாதக்காலம் காவலில் வைக்கப்பட்டிருந்த 53 ஆபிரிக்கர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சென்ற வருடம் ஜுன் மாதத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியொருவர் குத்திக கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## வேவு பார்த்ததாக குற்றச்சாட்டு

ரோம், பெப். 2

சில தினங்களுக்குமுன் இத்தாலியில்நொறுங்கிவிழுந்த பல்கேரிய போர் விமானத்தைச் செலுத்திச் சென்ற விமானியின் மீது வேவு பார்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர் மீது விரைவில் விசாரணை நடைபெறும்.

## அநுராதபுரம் உபதேர்தல்

கொழும்பு, வெள்ளி

அநுராதபுரம் எம். பி. யாக பதவி வகித்த திரு. சிறிமேவன் கொடகே காலமாதால் காலியான அநுராதபுரம் ஸ்தானத்துக்கான உபதேர்தல் நடைபெறவிருக்கிறது. உப தேர்தலில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 21-ந் திகதி அநுராகபுரம் கச்சேரியில் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

பாரிஸ் பெப். 2

பிரஞ்சு ஜனாதிபதி டிகோலின் அல்ஜீரியக் கொள்கையை எதிர்த்து இயங்கும் இரகசிய ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை அடக்கி ஒடுக்குவதற்காக இராணுவத்தினர் தீவிர சேவைக்காக நேற்று அழைக்கப்பட்டனர்.

## 'நேருவுடன் பேசுவதற்கு எச்சமயமும் தயார்'

### பாகிஸ்தான் ஜனாதிபதிஅறிவிப்பு

டாக்கா, பெப். 2

"என்னுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இந்தியப் பிரதமருக்கு அதிக சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் அவற்றை 'அதற்காகப் பயன்படுத்த' அவர் அக்கறை காட்டவில்லை" என்று பாகிஸதான் ஜனாதிபதி அயூப்கான் நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

"பிரச்சினைகள்பற்றி விவாதிப்பதற்கு இன்னும் இடமிருந்தால் அவைபற்றி எச்சமயத்திலும் எந்த இடத்திலும்விவாதிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்" என்று ஜனாதிபதி அயூப் கூறினார்.

"என்னை டில்லிக்கு வருமாறு ஸ்ரீநேரு மீண்டும் வலியுறுத்தியிருப்பதில் புதிதாக எதுவுமில்லை. ஏனெனில் காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கம் அவருக்கு இருப்பதாகத் தோன்றவில்லை" என்று பாகிஸ்தான் ஜனாதிபதி கூறினார்.

மேற்கு பாகிஸதான் எல்லையில் இந்தியத் துருப்புக்கள் குவிக்கப்பட்டுவருவதாகவும் இது 'ஆபத்தான' நிலைமையை உருவாக்கிவருவதாகவும் ஜனாதிபதி அயூப்கான் கூறினார்.

இந்தியாவில் தேர்தல் பிரசாரத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் பாகிஸ்தானுக்கு எதிராகப் பகைமைப் பிரசாரம் செய்துவருவதாக அயூப்கான் சொன்னார்.

காஷ்மீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யும் அமெரிக்க முயற்சி முற்றாகத் தோல்வியடைந்துவிட்டதா வென்பது தமக்குத் தெரியவில்லையென்றும் மத்தியஸ்தத்தை நேரு நிராகரித்துவிட்டதாகவே தாம் கருதுவதாகவும் ஜனாதிபதி அயூப் தெரிவித்தார்.

## புரட்சியைத் தடுத்தனர்!

### இரு ஜெனரல்களுக்கு சிறைத்தண்டனை

சியோல், பெப். 1

சென்ற மேமாதத்தில் டாக்டர் ஜோன் சாங்கினுடைய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு நடைபெற்ற புரட்சியைத் தடுப்பதற்கு முயற்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டி இரண்டு தென்கோரிய ஜெனரல்களுக்கு இராணுவ புரட்சி நீதிமன்றம் நீண்டகால சிறைத்தண்டனை விதித்தது.

ஒரு ஜெனரலுக்கு 10 வருடச் சிறைத் தண்டனையும் மற்றவருக்கு 12 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

## பிரிட்டனுக்கு ஜெர்மன் ஆதரவு

பொன், பெப். 1

ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதற்கு மேற்கு ஜெர்மன் சாத்தியமான சகல வசதிகளையும் செய்துகொடுக்கவேண்டும் என்று மேற்கு ஜெர்மன் முன்னாள் வெளிவிவகார மாந்திரி டாக்டர் வொன் பிரண்டானோ மேற்கு ஜெர்மன் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

## இந்தியாவுக்கு அதிக ரப்பர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையிடமிருந்து அதிக ரப்பரை இந்தியா வாங்கவேண்டுமென்று கோருமாறு உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தினவை ரப்பர் வர்த்தகத் தூதுகோஷ்டியொன்று சந்தித்துக் கேட்டுக்கொள்ளவிருக்கிறது.

இந்தியாவுக்கு அதிக அளவில் ரப்பரை விற்பதற்கு மலாயா முயற்சிசெய்வதாக ரப்பர் வர்த்தகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பான் தடை விதித்தது!

டோக்கியோ, பெப். 2

மேற்கு இரியனுக்கு டச்சுத் துருப்புக்களை ஏற்றிக்கொண்டு சென்ற இரண்டு டச்சு விமானங்கள் டோக்கியோவில் இறங்குவதற்கு ஜப்பான் அரசாங்கம் தடை விதித்தது.

## 'அரபுமொழிக்கு நல்ல எதிர்காலம் உண்டு'

### உதவி வித்தியாதிபதி தகவல்

மட்டக்களப்பு, வியாழன்

"இன்றைய இஸ்லாமிய மாணவர்கள் அரபு மொழியை அவசியம் கற்கவேண்டும் எதிர்காலத்தில் அரபு மொழிக்கு நல்ல மதிப்பு எற்படுமென்பதை இப்பொழுதே இஸ்லாமிய மாணவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்."

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் அரபுப் போட்டி விழா, மருதமுனை வடக்கு முஸ்லிம் வித்தியாலயத்தில் நடைபெற்றபோது விழாவுக்குத் தலைமைதாங்கிய உதவி வித்தியாதிபதி ஜனாப் ஈ. எம். நூர்தீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியவாவது:-

மட்டக்களபபின் தென் பகுதியைச்சேர்ந்த, காத்தான்குடி மத்திய பாடசாலை, நிந்தாவூர் ஆண்கள் பாடசாலை, பெண்கள் பாடசாலை, அம்மாந்துறை சிரேஷ்ட பாடசாலை ஆகியவற்றிலிருந்து ஜி. சி. ஈ. பரீட்சைக்குத் தேறிய மாணவர்தள், அரபுப் பாஷையையும் ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்துள்ளனர் என்பதை அறியும்போது, இப் பகுதி அரபு ஆசிரியர்கள் செய்துவரும் சேவையை நான் நன்கு உணரமுடிந்தது.

ஜனாப். எம். எஸ். எம். ஹத்தாத், கல்முனை எம். பி. ஏம். சி. அஹமது, ஜனாப். எஸ். எம். உசைன் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்.

அரபுப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு ஜனாப். எம். எஸ். எம். ஹத்தாத பரிசில்கள் வழங்கினர்.

### மணி வாக்கு

'நான் சுவர்க்கத்தில் இருக்க வேண்டுமானால், முதலில் சுவர்க்கம் என்னிடம் காணப்படல் வேண்டும்.'


# ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 21உ ( 3- 2 - 62)


## 'ஜயமுண்டு பயமில்லை'

இன்று எட்டுக் கிரகங்களும் மகரராசியில் ஒன்று சேருகின்றன. இக்கிரகங்களின் சேர்க்கையால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றியே எங்கும் பேசப்படுகின்றன. கோள்கள் ஒன்று கூடுவதால் உண்டாகும் சகல தோஷங்களும் பீடைகளும் உலக மக்களைப் பாதிக்காமல் பேரின்ப வாழ்வு வாழவைக்க வேண்டுமென்பதற்காக கோயில்களில் பிரார்த்தனைகளும் விசேஷ ஆராதனைகளும் நடைபெறுகின்றன. எட்டுக் கோள்கள் ஒன்று சேர்வதால் இப்போது மக்களின் இதயங்களில் எல்லாம் இறைபக்தி எழுந்திருப்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டி எல்லாம் நன்மைக்கே என்று தைரியமூட்டிவருகின்றனர். 'நம்பன் அடியார் முன் நாளும் கோளும் நல்லவையே' என்று சொல்லி கோளறு பதிகத்தைப் பாராயணம் செய்து வருபவர்களின் தொகையும் இந்நாட்களில் பெருகி வருவதைக் காண்கின்றோம்.

சூரியன், சுக்கிரன், சனி, செவ்வாய், கேது, புதன், குரு ஆகிய ஏழு கிரகங்களும் ஏற்கெனவே ஒன்று சேர்ந்துவிட்டனவென்றும் இன்று இவற்றுடன் சந்திரனும் கூடுகின்றதெனவும் சோதிடர்கள் கூறுகின்றனர். இவ்வாறு எட்டுக் கிரகங்கள் கூடுவது சாதாரண நிகழ்ச்சியல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே இது நடைபெறுகின்றதென அறிகின்றோம். இவை ஒன்று சேருவதால் சந்திரன் பூமிக்கு மிக அருகில் வருகின்றதெனவும், இதனால் கடல் அலைகளின் கொந்தளிப்பை உக்கிரமாக்கும் சந்திரனின் சக்தி மேலும் அதிகப்படலாமெனவும் விஞ்ஞானிகள் எடுத்துக் காட்டுகின்றனர். இம்மாதம் ஐந்தாம் திகதி சந்திரன் பூமிக்கு மிக அருகில் வருகின்றது. அன்று உண்டாகும் பூரண சூரிய கிரகணம் பஸிபிக் சமுத்திர மண்டலத்தின் பகுதிகளில்தான் தெரியும். அத்துடன் ஆஸ்திரேலியா, தென்கிழக்காசியா, பஸிபிக் தீவுகள், வட அமெரிக்காவின் மேற்குக் கரையோரங்களிலும் சூரிய கிரகணம் ஏற்படும்.

கிரகங்கள் இவ்வாறு நெருங்கி ஒன்று கூடிய சம்பவங்கள் கடந்த 1000 ஆண்டுகளில் 7 தடவை ஏற்பட்டுள்ளது. ஆனால் பூரண சூரிய கிரகணத்தின்போது இவை ஒன்று கூடியது இதுவேமுதல் முறையாகும்.

ஒரே ராசியில் எட்டுக் கிரகங்கள் சேர்வதால் தீமையை விட நன்மையே ஏற்படுமென்பதை சோதிடத்தில் புலமையும் ஆராய்ச்சியும் நிறைந்த வல்லுனர்கள் கூறுகின்றனர். பொதுவாக நவக்கிரகங்கள் பூமியின் மீதும், பஞ்சபூதங்களான நீர், நெருப்பு, ஆகாயம், காற்று, மண் இவைகள் மீதும் சில விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது உண்மை. இதனை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

ஆனால் மனித விவகாரங்களில் கிரகங்களுக்கு என்ன அக்கறை என்று பிரதமர் நேரு ஒரு சமயம் குறிப்பிட்டிருந்தார். மனிதன் தனது விமோசனத்துக்கு அவனே அதிகாரியெனவும் நட்சத்திரங்களுக்கு அதில் சம்பந்தமில்லையெனவும் நேருஜி கூறியதைச் சோதிடர்கள் ஆட்சேபித்து தனது விமோசனத்துக்கு மனிதன் அதிகாரியாக இல்லையெனில் சோதிட சாஸ்திரமே இருந்திருக்க நியாயமில்லையென அவர்கள் வாதிக்கின்றனர்.

கரு முகில்கள் ஒன்றுகூடி மழை பொழியும் சமயத்தில் இதனை எழுதுகின்றோம். கிரகங்களின் சேர்க்கைக்கு இதுவும் ஓர் அறிகுறிபோலும். எனினும் காரிருள் தோன்றும் மின்னல் கீற்றுப் போன்று மகாகவி பாரதியின் இந்த அடிகள்தாம் பயத்தை நீக்குகின்றன.

ஜயமுண்டு பயமில்லை மனமே! இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு.

# சமய மறுமலர்ச்சி ஏற்படுத்துவதே நோக்கம்

## இந்திய அறநிலைய கமிஷன் தலைவர் விளக்கம்

**இந்திய அறநிலைய கமிஷனின் தலைவர் டாக்டர் ஸி. பி. இராமசுவாமி ஐயரும் ஏனையஅங்கத்தினரும் சமீபத்தில் கும்பகோணத்துக்கு விஜயம் செய்தனர். அங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கமிஷன் தலைவர் டாக்டர் ஸி. பி. இராமசுவாமி ஐயர் தெரிவித்த கருத்துக்கள இந்நாட்டுக்கும் உகந்தனவே.**

தேசத்தில் இப்போதுள்ள நிலைமையை ஒவ்வொருவரும் நன்கு கவனிக்கவேண்டும். வட இந்தியாவில் கோவில் என்று சொல்லக்கூடிய, முழு அளவில் ஒன்றுகூட இல்லை. அதிலும் புராதனக் கோவில்களின் நிலைமை, மேலும் க்ஷீணித்திருக்கிறது. கல்கத்தா, பிருந்தாவனம், பஞ்சாப், ராஜஸ்தானிலும்கூட, கோவில்கள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அவைகளில் வழிபாடு செய்தநிலையே மக்களிடத்தில் அற்றுப்போய்விட்டது. வட இந்தியாவில் கோவில்கள் இந்தத்துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, மக்களிடையே மறுபடியும் விழிப்பேற்படச் செய்து கோவில்கள், மடங்களை எப்படிக் காப்பாற்றி அவைகளை அபிவிருத்தி செய்வது என்பதே கமிஷனின் முக்கிய வேலையாகும். கோவில்களும் மடங்களும் எல்லாம் வல்ல இறைவனிடத்தில் ஆன்ம கோடிகள் தூய்மையான வழியில் வழிபடவே ஏற்பட்டதாகும். கோவில்களில் திருவிழாக்கள் முதலியவை இதற்காகவே யாகும். சமூகநலம், நல்ல நல்ல பண்பாடுகள், கலைகள் முதலியவை வளர்ப்பதற்கு விழாக்கள் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தன. கேரளாவில் "கதக்களி" இவ்வகையில் உருவானதேயாகும்.

வங்காளத்தில் பகவான் ராமகிஷ்ணர் அர்ச்சகராயிருந்த கோயிலை தனிநபர் கோவில் என்று உரிமை கொண்டாடப்படுகிறது. மற்றொரு இடத்தில் மலைமலையாய் உணவு ஏலம் போடப்பட்டுக் கிடைக்கும் ஷாசை முழுவதும், டிரஷ்டியிடம் கொடுக்கப்படுகிறது. அந்த டிரஸ்டி தானே தெய்வம் என்றும்; எல்லாம் தன்னைச் சேர்ந்ததென்றும், உரிமை கொண்டாடுகிறார். மற்றொரு டிரஸ்டி கல்கத்தாவில் அனேக பங்களாக்களைக் கட்டியும், மோட்டார்கார்களையும், பல இடங்களில் சிற்றின்ப சாதனங்களையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். இம்மாதிரியான விடயங்களில் உள்ள சட்ட நுட்பமான அம்சங்கள் இருக்கட்டும். கோவில் மற்ற தர்மச் சொத்துக்களை எதற்காக அவைகள் ஏற்பட்டதோ, அந்த வகையில் அவைகளைப் பராமரிக்க என்னென்ன அம்சங்கள் தேவை என்பதையும், கமிஷன் ஆராய்ந்துவருகிறது. இந்த நோக்கத்துடன் அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்று கருதப்பட்டால் அதைப் பற்றியும் கமிஷன் நன்கு சிந்தித்து முடிவுசெய்யும்.

தர்ம ஸ்தாபனங்கள் கணக்குகள் சரிவரப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படவேண்டும். அதற்கான வழிவகைகளைக் கமிஷன் ஆராய்ந்து முடிவுசெய்யும். சாதாரணமாய் வருஷத்துக்கு 200 முதல் 300 கோடி ரூபாய் தர்ம ஸ்தாபனங்களில் வருமானமாகும். பெரிய கோவில்கள், பணமுள்ள கோவில்கள் பணமில்லாத இதர கோவில்களுக்கு உதவவேண்டும். எல்லாக் கோவில்களும் நல்ல நிலையில் இருக்கவேண்டியதே முககிய நோக்கமாகும்.

### யாத்திரீகர் வசதி

15 வருஷங்களுக்கு முன் கோவில் வருமானம் சுமார் 15 லட்சம் ரூபாய் தான். இப்பொழுது ரூபாய் 1 கோடியே 10 லட்சம். எப்படி இந்த அதிக வருமானம் ஏற்பட்டது யாத்திரீகர்கள் சௌகரியத்தைச் சரிவரக் கவனித்து நல்ல ரஸ்தாக்கள் மற்றும் பல வசதிகள் ஏற்படுத்தியுள்ளதால்தான் உதாரணத்துக்குக வட இந்தியாவில், உள்ள கயாவை எடுத்துக்கொள்ளலாம். அங்கே அனைவரும் சிராரத்தம் செய்யப்போகிறார்கள். அங்கே வெயிலுக்கு ஒரு பந்தல்கூடக் கிடையாது. ரயில்கள் ஓடுகின்றன. கிகவும் சமரஸமான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. திருப்பதி எங்கே? காயா எங்கே? திருப்பதியில் மாணவர் எழுச்சி செய்யப்படுகின்றது. ஆச்சாரியாளின் ஆதரவில் திருப்பாவை திருவெம்பாவை மகாநாடுகளும் நடைபெறுகின்றன. இவை வரவேற்கத்தக்கன.

### தஞ்சையில்

தஞ்சை ரோட்டரி சங்கத்தில் டாக்டர் ராமசுவாமிஐயர் பேசியதாவது: மனிதனுடைய வாழ்க்கையை இரண்டுவிதமாகக் கொள்ளலாம். ஒன்று தன் சௌகரியத்திற்காகப் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்துவது; மற்றொன்று பிறர் கஷ்டத்தை அறிந்து அவர்கள் மேல் அன்பு செலுத்தித் தர்மம் செய்து அவர்கள் துயரை துடைப்பது. தர்மமானது ஒரு கட்டுப்பாடான வழியில் செய்தாலொழியப் பிரயோசனப்படாது.

காலம் அறிந்து பிச்சை கொடு என்பதைப் போல தர்மம் செய்வதையும் அவசியத்தின் தன்மைப உணர்ந்து செய்ய வேண்டும். அதுதான் தர்மமாகும். மேல் நாடுகளில் ரோட்டரி, செஞ்சிலுவை போன்ற சங்கங்கள் பலரிடமிருந்து பணம் திரட்டிக் கட்டுப்பாடான முறையில் சமூக சேவைக்காகவும், கல்வி போன்ற ஸ்தாபனங்களுக்காகவும் சிறந்த முறையில் பணியாற்றிவருகின்றன. நம் நாட்டிலும் நமக்குத் தர்மம் செய்வதில் மற்றவர்களைவிட ஆர்வம் இருக்கிறது. ஆனால், சரியாக கணகாணிப்பு என்பது நமக்குக் கிடையாது. ஆகையால் தான் நாம் பல பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியும் கூட்டுறவு சங்கங்கள் நடத்தியும் பலவித ஊழல்கள் இருப்பதைக் காண்கிறோம்.

இரத்தினக் கம்பளம்

## தமிழுக்கு மணம் உண்டு

பதுமன்

'தமிழ் மணங் கமழவேண்டும்' என்று மணிரங்கு ராகத்தில் கீர்த்தனம் பாடுகிறார்களே, உண்மையில் தமிழுக்கு ஒரு தனி மணம் உண்டா என்று கேட்டால், கட்டாயம் உண்டு என்று நான் தயங்காது சொல்வேன். தமிழ் மணம் என்பது புகையிலைச் சுருட்டைப் புகைக்கும்போது உண்டாகும் மணமாகவே இருக்கவேணடும். யாழ்ப்பாணத் தமிழர்களோடு பழக நேர்ந்தவர்கள் யாவரும் இதை எளிதிற் கண்டுகொள்வார்களெனக் கல்கி ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தி ஒரு சமயம் இலங்கையைப்பற்றி எழுதும்போது குறிப்பிட்டிருந்தார்.

காலஞ் சென்ற சென்னை, 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீநிவாசன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காம் தமிழ் விழாவை ஆரம்பித்து வைத்த போதும் கல்கி ஆசிரியர் தமிழுக்கும் புகையிலைக்குமுள்ள நட்புறவை எடுத்துக்காட்டி ஆசிரியர் ஸ்ரீநிவாசன் தமிழ் விழாவை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைப்பது மிகவும் பொருத்தமானதெனக் கூறினார். 'சுதேசமித்திரன்' ஸ்ரீநிவாசன் தாம்பூலத்துடன் புகையிலையையும் போட்டு நன்றாகக் குதப்புவார். இதனைப் பேராசிரியர் கல்கி நினைவூட்டித் தமிழுக்கும் புகையிலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் பேராசிரியர் ஸ்ரீநிவாசனுக்கும் உள்ள தொடர்பை நகைச்சுவையுடன் எடுத்துரைத்தார். சென்ற வாரம் சுதேசமித்திரன் ஸ்ரீநிவாசன் காலமானார் என்ற செய்தியைக் கேட்டபோது அவர் புகையிலையைக் குதப்பிக் கொண்டு மேடைகளில் இனிமையாகப் பேசும் காட்சி அப்படியே மனக்கண்முன் தோன்றியது.

### 'டெயிலி மிரர்'

மக்களின் தினசரி எனப் பெருமை பாராட்டும் ஆங்கிலத் தினசரியான 'டெயிலி மிரர்' வியாழக்கிழமை இரண்டாவது ஆண்டை ஆரம்பித்துள்ளது. 32 பக்கங்களுடன் பொலிவாக வெளிவந்த அந்த இதழைக் கையில் தூக்குவதற்கே பாரமாய் இருந்தது. இப்பத்திரிகையின் வளர்ச்சியையிட்டு மக்கள் பெருமை கொள்ளலாம். காரியாலயச் சேவகன் தொடக்கம் சிவில் சேர்விஸ் அதிகாரிவரை அனைவருக்கும் பத்துச் சதத்துக்குக் கிடைக்கும் பத்திரிகை 'டெயிலி மிரர்' பல்லாண்டு வாழவேண்டுமெனப் பதுமனர் வாழ்த்துகின்றார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## இன்னுமா கோவில்களில் உயிர்க் கொலை?

சுளிபுரம் பத்திரகாளியம்மன் கோவிலில் மிருகபலி நிறுத்தப்படவே இல்லையென்றும் 20-1-62ல் வெளியான கூற்று தவறானதென்பதையும் அறிந்து மிகவும் வருந்தினோம். சிங்கம், புலி முதலாய வன விலங்குகளையெல்லாம் மனிதன் இன்று பழக்கி சர்க்கஸ் காட்டும் இக்காலத்திலும் வட மகாணத்தில் - நாவலர் பிறந்த நல்லகத்தில் — கோவில்களில் மிருகபலி நடைபெறுவது, இந்துக்களுக்கு மிகவும் அவப்பேரைக்கொடுக்கிறது. அதிலும் நெகிழ்ச்சியுடைய அன்னை பராசத்தியின் சொரூபமாகிய பத்திரகாளியம்மையின் சந்நிதியில் "அம்மா" என்று ஆடுகள் அலர, "அக்கே" "சச்சே"என்று சேவல்கள் கடைசிச் சத்தம் போட்டுமுடிய வேள்விசெய்வது பாதகங்களுள் சிரேட்டம் பெற்று நிற்கும்.

இனியாவது நிர் அபராதிகளாய ஆடுகளும், கோழிகளும் பலியிடப்படுவதை நிறுத்த யாழ்ப்பாணத்தவரும் (விசேடமாக, சுளிபுரம், பண்ணாகம், பருத்தியடைப்பு, சித்தங்கேணி வாசிகளும்) அப்பகுதி எம். பி. யும் செப்பமுறத் திட்டமிட்டு முயல்வார்களாக.

அன்னை பராசத்தியின் அருள் ஓங்குக!

மீசாலை இ. த. சுப்பிரமணியம்

## கோப்பாய் கி.மு. சங்கம் நிர்வாகிகள் தெரிவு

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தபொதுக் கூட்டம் இச்சங்கத்தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி, தனாதிகாரி ஆகியோரால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. ஜே. ரி. சபாபதிப்பிள்ளை கோப்பாய் கி. ச. தலைவர் திரு. க. இராசரத்தினம், சகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். ஆறுமுகசாமி ஆகியோரும் பேசினர். புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: திரு. க. இ. குமாரசாமி, காரியதரிசி: திரு. செ. சந்திரசேகரம், தனாதிகாரி: திரு. க. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திரு. ஜே. எஸ். ஆனந்தம், திரு. கே. இராசரத்தினம், உபகாரியதரிசி: திரு. தி. சுப்பிரமணியம்.

மேலும் பத்துப் பேர் கொண்ட நிர்வாகசபையும் அமைக்கப்பட்டது. போஷகராக திரு. இ. இளையதம்பி தெரிவு செய்யப்பெற்றார்.

நுவரேலியா

### புதுடில்லியில் ஈழநாடு

தமிழ் பேசும் மக்களின் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அடுத்த வாரம் நான்காவது ஆண்டு ஆரம்பமாகின்றது. இதனையிட்டுத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள். இதனை எழுதும்போது 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி ஹரன் அவர்கள் புதுடில்லியில் உபஜனாதிபதி ராதாகிருஷ்ணனையும், பிரதமர் நேருவையும் சந்தித்துப் பேசியதாகக் கிடைத்துள்ள கடிதம் நினைவுக்கு வருகின்றது. இந்த விபரங்களை எல்லாம் வாசகர்களுக்கு அவர் கூறுவார் என்பதை அறியும்போது எவ்வளவு மகிழ்ச்சி.

புதுடில்லியில் அவர் நின்ற நாட்களில் டில்லித் தமிழ்ச் சங்க விழாவிலும் பங்கு பற்றினார். ஈழம் தொட்டு இமயம் வரை ஈழநாட்டின் புகழ் பரவி வருவது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

# வருமானவரி கட்டாத 68 வியாபாரிகள்

## நாட்டை விட்டுச் செல்ல முடியாமலுள்ளனர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையரல்லாத 17 பேர் உட்பட 68 வியாபாரிகள், வருமான வரி கட்டவில்லை என்ற காரணத்தினால் இலங்கையை விட்டுச் செல்ல முடியாமலிருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் ஒவ்வொருவரும் வருமானவரிக்குச் செலுத்த வேண்டிய பணம் 6 இலக்கத் தொகையென்றும்அதைசெலுத்தும்வரை அவர்களை நாட்டிலிருந்து வெளியே செல்ல வருமானவரி இலாகா அனுமதிக்காது என்றும் கூறப்பட்டது. வருமானவரி கட்டாத இலங்கையரல்லாதார் பணத்தைச் செலுத்தாவிட்டால்அவர்களது சொத்துக்களைக் கைப்பற்றும் அபாயத்துக்கும் உள்ளாவார்கள் எனத் தெரிகிறது

---

### பலவந்தமாக கடைக்குள்புகுந்தாராம்

#### வெட்டுக் காயங்களுடன் வெளியேறினர்

அநுராதபுரம், வெள்ளி

எஸ். பியதாசா என்பவர் பாரதூரமான வெட்டுக்காயங்களுடன் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பியாதாசா மாவடி என்ற இடத்திலுள்ள கடையொன்றுக்குள் பலவந்தமாகப் புகுந்து அங்குள்ள கதிரைகளைச் சேதப்படுத்தியகாக நம்பப்படுகிறது.

---

### துணி திருடியவருக்கு 2 வருடக் கடுழியச் சிறை

மாவிட்டபுரம், வெள்ளி

மாதகலைச் சேர்ந்த ஜேக்கப் என்பவரின் மனைவியான மரியம்மாவுக்குச் சொந்தமான ரூபா 373-50 பெறுமதியான துணிகளைத் திருடியதாக அதே ஊரைச் சேர்ந்த வைத்தியன் செபமாலைன் மேல் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி 2 வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்


---


### விளம்பரம்

சுழிபுரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் நடைபெற்றுவந்த மிருகபலி நிறுத்தப்பட்டுவிட்டதாக "ஈழநாடு" உட்பட வேறுபத்திரிகைகளிலும் செய்தி வெளியாகியிருந்தது. இந்தச் செய்தி முற்றிலும் தவறானதென்பதை இத்தால் தெரிவிக்கின்றேன். ஒரு சிலர் பரப்பிய தப்பான வதந்திகளையே பத்திரிகைகள் வெளியிட்டன.

சுழிபுரம் பத்திரகாளிஅம்மன் கோவிலில் மிருகபலி தொடர்ந்தும் நடைபெறும் என்பதைப் பக்தர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், இப்பேற்பட்ட வதந்திகள் எதையும் வருங்காலத்தில் நம்பாதிருக்கும்படியும் கேட்க்கொள்ளுகிறேன்.

சிம்றம்பலம் ஆசைப்பிள்ளை

மனேஜர்.


---

### சந்தேக நபர் ரூ. 2500 பிணையில் விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

இந்தியாவிலிருந்து இலங்கையில் வந்து சட்டவிரோதமாகக் குடியேறுவதற்கு உதவி புரிந்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் தேடப்பட்டுவந்த சந்தேக நபரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த முத்துக்குமாரு கணேசன் என்பவர் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் நேற்று சரணடைந்தபோது சந்தேக நபரை ரூபா 2500 பிணையில் செல்லும்படியும் இம்மாதம் 16-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார். பிணை செலுத்தத் தவறினால் சந்தேகநபரை இம்மாதம் 16ம் திக்திவரை ரிமாண்டில் இருக்கும்படியும் உத்தரவிட்டார்.

---

### கிரக தோஷம்

#### கி. ச. தலைவர்கள் கூட்டம்

வவனியா, வெள்ளி

கிரகதோஷப் பீதியை மக்களிடம் இருந்து போக்கும் முகமாக, வவனியாக் கச்சேரியில் ஓர் மகாநாடு நடைபெற்றது. இம்மகாநாட்டில் வவனியா மாவட்டத்திலுள்ள கிராமச் சங்கத் தலைவர்கள், கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

3-ம் திகதி முதல் 5-ம்திகதி வரை, எட்டுக்கிரகங்கள் மகர ராசியில் கூடுவதை முன்னிட்டு கிராம மக்களின் மனதில் குடிகொண்டிருக்கும் பீதிகளை நீக்கும் முகமாக, திருஞான சம்பந்தருடைய கோளறு பதிகம், கிராம மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது அது சமயம் வவனியா தமிழ்ப் பிரிவு காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை உரைநிகழ்த்தினர்.

---

### கடுழியச் சிறையும் அபராதமும்

நாத்தாண்டியா, வெள்ளி

மகாவெவ என்ற இடத்தைச் சேர்ந்த எஸ். ஏ. டொன ஜூலியனுஹாமி என்பவர் சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்திசெய்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சிலாபம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். செல்லையா ஜூலிபனுஹாமிக்கு ரூ. 500 அபராதம் விதித்தார்.

வலஹாபிட்டியாவைச் சேர்ந்த டபிள்யூ ஆர். ஏ. களானி என்பவர் சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்ததாக அவர்மீது தொடரப்பட்ட வழக்கில் சிலாபம் மாஜிஸ்திரேட் அவருக்கு ஆறு மாதம் கடுழியச் சிறைத தண்டனை விதித்தார்.

---

### கடலில் மிதந்த சடலம்

திருக்கோணமலை, வெள்ளி

கடலில் மிதந்து கொண்டிருந்த இனந்தெரியாத ஒருவரின் சடலத்தை மீன்பிடிகாரர்கள் சிலர் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

---

### அருணாசலம் விடுதி மாணவர்கள் உண்ணாவிரதம்

#### பல்கலைக்கழகத்தில் திருப்தியற்ற உணவுக்கு ஆட்சேபம்

பேராதனை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக் கழகத்திலுள்ள அருணாசலம் விடுதி மண்டபத்து மாணர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். விடுதியில் அவர்களுக்குக் கிடைக்கும் உணவு திருப்தியற்றதாகையால் அதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக மண்டப மாணவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

மண்டப வசதிக் கட்டணமாக தலா 250 ரூபாய் செலுத்தும் மாணவர்கள் பல சுலோகங்களையும் கூறிக்கொண்டு பட்டினியாக நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

'எதிர்காலத் தலைவர்கள் உணவின்றிச் சாகின்றனர்' என்றும், 'நல்ல மண்டபத்தில் கெட்ட உணவு' என்றும் கூறிக்கொண்டு தமது மண்டபக் கொடியை பாதிக்கம்பத்தில் பறக்கவிட்டிருந்தனர்.

அருணாசலம் விடுதியைவிட ஏனைய விடுதிகள் நஷ்டத்திலேயேநடைபெற்றுவருகின்றன என்றும் அருணாசலம் மண்டபத்தில் உணவின் தரத்தையும் அளவையும் குறைத்து லாப மெடுக்கப்படுகிறது எனவும் கூறப்படுகிறது.

இறைச்சி போன்ற உணவுகள் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன என்றும், உண்ணமுடியாத அளவுக்கு உருசி குறைவாக உணவு சமைக்கப்படுகின்றதென்றும் தெரிகிறது. விடுதி காப்பாளர் கொழும்பிலிருந்து திரும்பும் வரை எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை என நிர்வாகத் தலைவர் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

---

### ஓடிய குரங்குகள் பிடிபட்டன

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இரண்டு 'சிம்பன்சி' குரங்குகள் அவற்றின் கூண்டைவிட்டு வெளியேறி சதந்திரமாக துள்ளிக்குதித்து கொழும்பு மிருகக்காட்சிச்சாலையின் 9 அடி நீளமான சுவரையும் தாண்டு ஓடின. சில மணி மணி நேரத்திற்குள் இக் குரங்குகள் பிடிக்கப்பட்டு அவற்றின் கூண்டுக்குள் மீண்டும் அடைக்கப்பட்டன.

---

# கணவனைக் கொலை செய்தாராம்

## விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த வேலன் பழனி என்பவரைக் கோடரியால் வெட்டி கொலை செய்ததாக அவரின் மனைவி பழனி சின்னத்தங்கம் மேல்குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது பருத்தித்துறை பொலிஸ்நிலைய பொறுப்பு அதிகாரி திரு. கே. குமாரின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

திரு. குமார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இக்கொலைச் சம்பவம் நடைபெற்ற கடந்தவருடம் ஏப்பிரல் மாதம் நான் சங்கானைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினேன். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 26-ந் திகதி இக் கொலைச் சம்பவம்பற்றி விசாரணை நடத்தினேன். விசாரணையின் பின்னர் சந்தேகத்தின் பேரில் கொலை செய்யப்பட்டவரின் மனைவியான பழனி சின்னத்தங்கத்தைக் கைதுசெய்தேன். எதிரியைப் பரிசோதனை செய்வதற்காக பிரேத பரிசேதேகர் டாக்டர் மயில்வாகனம் முருகேசம்பிள்ளை முன்னிலையில் ஆஜர்செய்தேன். டாக்டர் அவரைப் பரிசோதனை செய்தார்."

நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் 8ந்திகதிக்கு ஒத்தி வைத்தார்.

---

### சிவானந்தவித்தியாலய விஞ்ஞானக் கழகம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு இராம கிருஷ்ணசங்க, சிவானந்த வித்தியாலய விஞ்ஞான கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் விஞ்ஞானப் போதனாசிரியர் திரு. எஸ் பத்மானந்தவேல் தலைமையில்நடைபெற்றது. பின்வருவோர் புதுவருடஉத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் திரு. எஸ். பத்மானந்தவேல், உபபோஷகர் திரு. எஸ். சிவலிங்கம், தலைவர், திரு. எம். தம்பிஐயா, உபதலைவ்ர் திரு. கே. வடமலை, செயலாளர் திரு, எஸ். சிவசுப்பிரமணியம், பொருளாளர். திரு. கே. பரமக்குட்டி.

---

### அஷ்ட கிரகதோஷ நிவாரண வழிபாடுகள்

யாழ்ப்பாணம், சனி

எட்டுக்கிரகங்கள் மகர ராசியிற் கூடுவதால் மக்களுக்கு ஏற்படக்கூடியகஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்குஅரியாலை நீர்நொச்சித் தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் கோயிலில் இன்று சனிக்கிழமை 6 மணியளிவில் யாக ஆரம்பமும், ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணியளவில் விசேஷ் ஆராதனையும், பூசைகளும் நடைபெற்று 7 மணியளவில் லட்சார்ச்சனை ஆரம்பமாகும் மாலை 5 மணியளவில் விசேஷ அபிசேகமும் யாக உத்வாசனமும் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமைபகல் 12மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

---

### கிரக சாந்தி

உரும்பராய், சனி

அட்டகிரக சேர்க்கையினால் ஏற்படக்கூடிய தோஷங்களை நிவர்த்திக்கும் பொருட்டு, உரும்பராய் ஞானவைரவர் கோவிலில் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் அஷ்டகிரக சாந்தியும், சிவம், அம்பாள்; வைரவர்ஆகியோருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும்.

---

### சமரச முயற்சியை நிறுத்துக

ஜாகர்த்தா, பெப். 2

தமக்கும், ஹாலந்துக்குமிடையே சமரச முயற்சி செய்வதை நிறுத்திக் கொள்ளுமாறு, ஐ. நா. தலைமைக் காரியதரிசி திரு. யுதாண்டுக்கு இந்தோனேஷியா அறிவித்துள்ளது.

---


## மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM

மொணரு அன் ரோஸ் பப்படங்கள் மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM
REGD. TRADE MARK No 18255
A. M. BUHARI
255, 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

ஏ. எம். புகாரி அன் கோ.

99, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

# அரசாங்க ஊழியரின் கடமைகள்பற்றி எம். பி.

முல்கிரிகல வியாழன்

"தேசியமனப்பான்மையுடன் நாட்டுக்குச் சேவைசெய்வது தான் எந்த அரசாங்க ஊழியரினதும் நோக்கமாக இருக்க வேண்டும். அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் அவர்கள் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருந்து அரசாங்கத்தின் கொள்கையை அமுல்நடத்த வேண்டும்" என்று திரு. ஜோர்ஜ் ராஜபக்ச ரிடிகஹாயா அரசினர் பாடசாலையில் பாடசாலைத் தலைமையாசிரியருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்துல் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

அரசாங்க ஊழியர்களுக்கு பாரபட்சமாக சலுகைகாட்டப்படுவதில்லை- அரசாங்கசேவையில் தகுதியையும் திறமையையும் வைத்தே பதவி உயர்வு அளிககப்படுகிறது. அரசாங்க ஊழியர்களிடமிருந்து இந்த அரசாங்கம் சலுகையை எதிர்பார்க்கவில்லை.

திரு ராஜபக்ச மேலும் பேசுகையில் சிங்கள ஆசிரியர்களுக்கு, அவர்களுக்குரிய இடம் அளித்தவர் காலமசென்ற பிரதமர் பண்டாரநாயக்காதானென்றும் அவருடைய காலத்தில்தான் சிங்கள ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கிடைத்ததென்றும் இப்பொழுது சிங்கள ஆசிரியரின் பொறுப்பு அதிகமென்றும் கூறினார்.

## விபத்திலிருந்து ரயில் தப்பியது!

### தொழிலாளர் சாமர்த்தியம் காரணம்

தொடங்குவை, வெள்ளி

குமாரதந்தாப் பகுதி ரயில் பாதையில் வேலை செய்து நின்ற சில தொழிலாளிகளின் சாமர்த்தியமான உதவியால் ருருணகுமாரி ரயில் வரும் விபத்து ஒன்றிலிருந்து தப்பியது.

பல யார்கள் தூரத்துக்கப்பால் ரயில் பாதைக்கு குறுக்காக ஒரு தென்னைமரம் விழுந்து கிடந்த செய்தி ரயில் சாரதிக்குத் தெரியாதிருந்தது. பாதையில் வேலை செய்து நின்ற தொழிலாளர் கைகாட்டிச் சைகை மூலம் ரயிலை நிற்பாட்டும் படி கேட்டுக்கொண்டதால் தென்னைமரம் விழுந்து கிடந்த இடத்துக்கு சுமார் ஒரு யார் மட்டும் தூரத்துக்கிடையில் சாரதிக்கு ரயிலை நிற்பாட்ட முடிந்தது. தொழிலாளரின் புத்திசாலித்தனத்தால் விபத்து தடுக்கப்பட்டது. சம்பவம் காரணமாக ருகுணகுமாரிஅரை மணி நேரம் தாமதித்துச் சென்றது.

## வேறு எதுவும் சமாளிக்கமுடியாது

உடுநுவரை, வியாழன்

"இந்த நாட்டில் இன்று நிலவும் நிலைமையை இன்றைய சுதந்திரக் கட்சி அரசாங்கத்தினல் சமாளிக்கமுடியாதுபோனல் வேறு எந்த அரசாங்கமும் சமாளிக்கமுடியாது" என்று உடுநுவரை எம். பி. திரு. டி. பி. ஜயசுந்தரா லங்காதிலகா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்த விழாவில் பேசுகையில் கூறினர்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே !
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினிய இன்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.


## அரசாங்க விடுமுறை பெப்ரவரி ஐந்து!

கொழும்பு, வெள்ளி

பெப்ரவரி 5-ம் திகதி திங்கட்கிழமை அரசாங்க சேவையாளருக்கு மேலதிகமான பகிரங்க விடுமுறை நாளாக வழங்கப்பட்டுள்ளது. எனவே 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கான விடுமுறைதினச் சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படாதெனத் தெரிகிறது.

மேலதிக விடுமுறை நாளுக்கான சம்பளம் பற்றித் திறைசேரி நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், இலாகாத் தலைவர்களுக்கும் செய்தி அனுப்பியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் பகிரங் விடுமுறை நாட்கள் வரும் சமயங்களில், இதுவரை திங்கட்கிழமைகள் மேலதிகமான விடுமுறை நாட்களாக வழங்கப்படவில்லை.

## நஷ்டம் பாதி குறைந்துவிட்டது

### இ. போ. சபையின் சாதனை

கொழும்பு, வெள்ளி

1960-ம் ஆண்டில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 10,204,000 ரூபாய் நஷ்டமேற்பட்டது. 1959-ம் ஆண்டில் 13,055,000 ரூபாய் நஷ்டமேற்பட்டது. 1961-ம் வருடத்தில் 6,50,000 ரூபாய் வரையில் தான் நஷ்டமேற்படும். இ.போ. சபையின் நஷ்டத்தை இவ்வளவுக்குக் குறைத்தது ஒரு சாதனை என்று இ. போ. சபையின் முன்னாள் தலைவர் திரு. ஆர். டி. டி' சில்வா ஒரு அறிக்கையில் தெரிவித்துளளார்.

ஓடிட்டர் ஜெனரல் இ. போ. சபையின் 1960-ம் வருட கணக்கு விபரம்பற்றி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தவைகளுக்குப் பதிலளிக்குமுகமாக திரு. சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்,

1958-ம் ஆண்டுக்கும் 1959-ம் ஆண்டுக்குமிடையில் இ. போ. சபையில் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு அளித்ததால் சபைக்கு ஒரு கோடி எழுபது லட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டதென்றும், பஸ் கட்டண விகிதத்தை தரப்படுத்தவேண்டுமென்று இ. போ சபை கூறிய யோசனையை கட்டணசபை அங்கீகரித்தும் அரசாங்கம் இன்னும் அனுமதியளிக்கவில்லை யென்றும் திரு. சில்வா தெரிவித்துள்ளார்.

## நெல் உத்தரவாதவிலை அதிகரிக்கப்படவேண்டும்

பொல்காவலை, வெள்ளி

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் ஒரு புசல் நெல்லின் விலையை ரூபாய் 20 ஆக அதிகரிக்கும் படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று பொல்காவலை பட்டின சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உத்தரவாத விலைத் திட்டத்தின் படி இப்பொழுது ஒரு புசல் நெல் 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

மேற்படி பிரேரணையைத் தொடக்கி வைத்து தீர்மானத்துக்கு ஆதரவு கொடுத்த திரு. காமினி டி' சில்வா பேசுகையில், கிராம மக்களின் பொருளாதார நிலை குன்றிப் போய் வருவதாயும், அதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் எதுவித முயற்சியும் எடுப்பதில்லை எனவும், கூறினர்.

ஒரு புசல் நெல்லின் விலை 20 ரூபாயாக உயர்த்தப்பட்டால், கிராமப்புற விவசாயிகளின் பொருளாதார நிலை ஸ்திரமாக்கப்படுவதோடு அதிக அபிவிருத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதுமாகும் எனத் திரு. சில்வா கூறியுள்ளார்.

# மந்தி கடித்து சோதிடர்மரணம்

## மந்திர கவசம் வழங்க பயிற்சியளித்தார் பலிகொண்ட குரங்குக்கு பொலிசார் வேட்டு!

மாத்தளை, வெள்ளி

குரங்குக்குட்டிஒன்றின் உதவியுடன் தெருவீதியிலிருந்து சாஸ்திரம் கூறிவந்த சாஸ்திரி ஒருவரை அதே குரங்குக்குட்டி கடித்துவிட்டதால் மரணமானர்.

சாஸ்திரம் கேட்பவர்களுக்கு மந்திர கவசங்களை வழங்குவதற்கு சாஸ்திரியார் மந்திக்குட்டிககு பழக்கி வைத்திருந்தார்.

வத்தேகமா, மாத்தளைச் சந்தியில் இருந்து எட்டுக்கிரக சேர்க்கை பற்றிய பலன்களையெல்லாம் தீவிரமாகக் கூறிக்கொண்டிருந்தார் சாஸ்திரியார். சாஸ்திரம் கேட்ட ஒருவருக்கு மந்திரகவசத்தை வழங்கும் படி மந்திக்கு அவர் உத்தரவிட்டபோது, அதற்குப் பதில் மந்தி சாஸ்திரியாரிடம் சென்று அவரைக் கடித்துவிட்டது. கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சாஸ்திரியார் சிறிது நேரத்தால் அங்கு காலமானர். மந்திக்குட்டியை வத்தேகம பொலிசார் சுட்டுக்கொன்றனர்.

இதே மந்தி மாத்தளை பஸ் நிலையத்தில் நின்ற இருவருக்குச் சில காலத்துக்கு முன்னர் கடித்ததாம்.

# உள்நாட்டில் நெல் உற்பத்தி போதாது

## விவசாய டைரக்டர் அறிக்கை

குருநாகல், வெள்ளி

உள் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல்லரிசி, அதிகரித்துவரும் சனத் தொகையின் அரைவாசித் தேவைக்கும் போதாது என விவசாய டைரக்டர் திரு. ஏ. வி. றிச்சார்ட்ஸ் கூறியுள்ளார்.

1968-ம் ஆண்டில் ஒன்பதரைக் கோடி புசல் நெல்லரிசி தேவைப்படும் என 10 ஆண்டு திட்டத்தினல் அறியக்கிடப்பதாக விவசாய டைரக்டர் தமது 1960-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் கூறியுள்ளார். சனத்தொகை அதிகரித்து வருவதால் ஏக்கர் ஒன்றிலிருந்து 48 புசல் பெற்றுக்கொள்ளுமளவுக்கு பத்தாம் ஆண்டு இறுதியில் விளைவு அதிகரிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1959-60 காலப் பகுதியில் சராசரி நெல் விளைவு ஏக்கர் ஒன்றுக்கு 36.10 புசலாகவிருந்தது. 1960 இறுதியில் அது 38.8 புசலாக அதிகரித்தது.

அதிகமான நிலப்பரப்பில் நெற்பயிரிடுவதாலும், ஏக்கர் ஒன்றுக்குப் பெற்றுக்கொள்ளப்படும் சராசரி விளைவை அதிகரிப்பதாலும் உள்நாட்டு நெல் உற்பத்தியை அதிகரிக்கலாம் என விவசாய டைரக்டர் கூறியுள்ளார்.

உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் 1960-ம் ஆண்டில் 40 லட்சம புசல் நெல அரசாங்கத்துக்கு அதிகமாக வழங்கப்பட்டது. 1959-60-ம் ஆண்டுகளிலும் பார்க்க இப்போது அதிகமான நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுவருகிறது.

## அஷ்டகிரக வழிபாடு

### கிளிநொச்சியில்

கிளிநொச்சி திருநெறிக் கழகத்தின் ஆதரவில் குடியேற்றப் பிரதேசங்களில் வீடுகள் தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுகின்றது. தேவாரம், திருவாசகம் முதலிய தோத்திரப்பாடல்களை இலவசமாக திருநெறிக்கழகத்தார் அச்சிட்டு குடியேற்றப்பகுதி முழுவதும் வீடுவீடாக பரப்பியும் ஆங்காங்கு இளைஞர்கள், மாணவர்கள் கூட்டம் கூட்டமாக வீடு வீடாக சென்று நாள்தோறும் பஜனை செய்து பயிற்சி அளித்தும்வருகின்றனர். மகரராசியில் 8 கிரகங்கள் கூடுவதை முன்னிட்டு கோளறுபதிகமும் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

### புங்குடுதீவில்

4-2-62 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணியளவில், புங்குடுதீவு, பெருங்காடு ஸ்ரீமீனாக்ஷி சோமசுந்தரேஸ்வர சுவாமி கோவிலில் அஷ்டகிரகதோஷ நிவர்த்திக்கு, சுவாமிக்கும் அம்பாளுக்கும் நவக்கிரகங்களுக்கும் அபிஷேகமும், பதினாயிரம் அர்ச்சனையும்நடைபெறுவதற்கு புங்குடுதீவு, கூட்டுப் பிரார்த்தனைச் சபையா (கொழும்பக் கிளை) ரால் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கிறது.

### சுன்னுகத்தில்

எட்டு கிரகங்கள் ஒன்றுசேர்வதனல் வரும் இன்னல்களை தீர்க்கும்முகமாக கந்தரோடையிலுள்ள அருளானந்தப்பிள்ளையார் கோவில், வத்தாக்கை அம்மன்கோவில், ஒட்டங்கட்டு வயிரவர்கோவில், வீரகத்திப் பிள்ளையார்கோவில் ஆகியவற்றில் விசேட பூஜைகளும் பஜனைகளும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன,

### அளவெட்டியில்

அளவெட்டி சதானந்த வித்தியாலய அருள்நெறி மன்றத்தினரால் சென்றவியாழக்கிழமை கும்பளாவளை விநாயகர் ஆலயத்தில் விசேஷ ஆராதனைகளோடு கோளறுபதிக கூட்டுப்பிரார்த்தனை நடாத்தப்பெற்றது. அகில இலங்கை சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத்தாரும் இவ்விசேஷ கூட்டுப்பிரார்த்தனையில் கலந்துகொண்டார்கள்.

### முன்னேஸவரத்தில்

ஸர்வாபீஸ்ட வரத ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி தேவஸ்தானத்தில் 23-10-61 முதல் நடைபெற்று வரும் அஷ்டக்கிரககூட தோஷ நிவாரணார்த்த மேருயந்த்ர பூஜா கோடியர்ச்சனை பூர்த்தி தினமாகிய 5-2-62 ஸோமவார மகோதயத்தன்று மஹா சப்காபிஷேகங்கள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

### கோப்பாயில்

கோப்பாய் வெள்ளொருவைப் பிள்ளையார் கோவிலில் 3-ம் திகதி சனிக்கிழமை மாலை, கணபதி ஓமம், விசேஷபூசை, பஞ்சசகஸ்சிரநாமார்ச்சனையும் 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அபிஷேகம், விசேஷபூசை, பஞ்சசகஸ்சிர நாமார்ச்சனை, நவக்கிரக பூசை ஓமம் முதலியன நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

### மட்டக்களப்பில்

அஷ்டகிரக சேர்க்கையால் மக்களுக்கு இன்னல்களேற்படாதிருக்க இறைவனைப்பிரார்த்திக்கும் நோக்குடன், ஆரயம்பதி பரமநயினர் கோவிலில் சென்ற31-ம் திகதி தொடக்கம் நவக்கிரக ஓம்பஸ்தாபனமும், அஷ்டோத்தரசகஸ்திரநாமமும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றுவருகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

சனி, 3-2-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 சேர்ந்தஇசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கமலாவதி சபாரத்தினம்-பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 மோகனும்பிகை கணேசன் -பாட்டு, 10-15 நாட்டிய இசை.

ஞாயிறு 4-2-62

காலை 6-35 விசேஷ முஸ்லிம் பக்திப் பாடல்கள், 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்தஇசை, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 கதம்பஇசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-10 குரல்வகை, 6-30 தாள வாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 இசைச்சித்திரம், - "வாழ்க சுதந்திரம்", 7-30 ஏ. சிவகுமாரன் - பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 பிரதமரின் பேச்சு, 9-15 'அன்பின் வெற்றி' - நாடகம், 9-45 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

சனி, 3-2-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 வி. சுந்தரேசன் - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள் 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல்இசை, 2-10 வி. சுந்தரேசன் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'குண்டலகேசி' - நாடகம், 8-00 டெல்லிஅஞ்சல், 8-40 இசைமாலை, 9-15சென்னை சென்னை அஞ்சல், 9-30 அகில பாரத சங்கீதம்.

ஞாயிறு 4-2-62

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள். 7-00 வாத்தியஇசை, 7-10 பி ஆர். எஸ். மணி - புல்லாங்குழல், 8-15 ஜி. வைதேகி - பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி - கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 சென்னை அஞ்சல்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கமலா கைலாசநாதன் - பாட்டு, 8-30 பி. ஆர். எஸ். மணி - புல்லாங்குழல், 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லிஅஞ்சல், 9-45 ஒலிப்பதிவுகள்.

## மயிலப்பையில் திருடர் நடமாட்டம்

தெல்லிப்பழை, வியாழன்

தெல்லிப்பழைப் பகுதியைச் சேர்ந்த மயிலப்பை என்னுமிடத்தில் இவ் வாரத்தில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. ஒரு இரவில் ஆறு வீடுகளிற் பொருட்களும் நகைகளும் திருட்டுப் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறுமாதங்களாக இல்லாத திருடரின் நடமாட்டம் மீண்டும் தோன்றியிருப்பது கண்டு இப் பகுதி மக்கள் பெரும் திகிலடைந்திருக்கிறார்கள்.

## மட்டக்களப்பில் மீண்டும் பெரு மழையும் காற்றும்!

### வீடுகள் பல விழ்ந்தன

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் மீண்டும் பெரு மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. பலத்த காற்றும் வீசிக் கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பின் கரையோரப் பகுதிகளாள, காத்தான்குடி, மஞ்சந்தொடுவராய், ஆரயம்பதி, காங்கேயன் ஓடை, பாலமுனை ஆகிய கிராமங்களில் பல வீடுகள் விழுந்துவிட்டதால், மக்கள் பெரும் கஷ்டமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு குடியேற்றப் பகுதிகளான இராஜதுரைபுரம், இருதயபுரம், ஜயந்திபுரம், ஆகிய பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளன. அடைமழையினால் மக்கள் பெரிதும் கஷ்டப் படுகின்றனர்.

காலம் தவறி மழைபெய்வதால் இப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் வெள்ளத்தில் தாழ்ந்துள்ளன.

## முன்னேற்றம் தளர்கிறது

கம்புறுப்பிட்டி, வியாழன்

"பௌத்த குருமார்களிடம் வரி அறவிட முயற்சி செய்யும் அரசாங்கம் தன்னிடம் பணமில்லை என்று கூறுகிறது. அரசாங்கத்தின் முன்னேறிச் செல்லும் திட்டம் தளர்ந்து போவதாகத் தோன்றுகிறது" என்று கம்புறுப்பிட்டி எம். பி. திரு. பேர்ஸி ஏ. விக்கிரமசிங்கா ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

## மிகப்பெரிய உரத்தொழிற்சாலை

புதுடில்லி, பெப். 2

உலகிலேயே மிகப்பெரியரசாயன உரஉற்பத்தித்தொழிற்சாலைகேரளாவில் கட்டப்பட்டு வருகிறது.




# இரு குழந்தைகளை கிணற்றில் வீசிய பெண்ணுக்கு பத்துமாதக் கடுஞ்சிறை!

பண்டாரவளை, வெள்ளி

கணவருக்கும் தனக்குமிடையே ஏற்பட்ட சச்சரவு ஒன்றன் பின்னர் தனது இரு பிள்ளைகளையும் கிணற்றுள் வீசிவிட்டுத் தானும் ஆற்றுள் விழுந்து தற்கொலை செய்துகொள்ள எத்தனித்த ஒரு பெண் தற்கொலை செய்வதினின்றும் தடுக்கப்பட்டார். லூவியா என்னும் 22 வயதான இந்தப் பெண், நீதியரசர் திரு எச். டபிள்யு. ஆர். வீரசூரியா முன்னர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். ரூசலின் என்னும் 6 வயதுப் பிள்ளையையும் சைமன் என்னும் 2 1/2 வயதுப் பிள்ளையையும் எதிரி கிணற்றுள் வீசிக் கொலை செய்திருந்தார்.

விசாரணையின் போது, குழப்பமான மனநிலையில் எதிரி குற்றத்தைச் செய்திருந்தார் என்பதை ஜூரிகள் ஏகமனதாக ஒப்புக் கொண்டனர்

எதிரிமீது ஜூரிகள் இரக்கம்காட்டியுள்ளனர் எனக் கூறி நீதவான் லூவியாவுக்கு 10மாதக் கடுஞ் சிறைத்தண்டனை விதித்தார்.

புராசிக்கியூஷன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஆர். எம். பெரேராவும் எதிரி சார்பில் திரு. வி. கே. சிவசுப்பிரமணியமும் ஆஜராகியிருந்தார்கள்.

## காதலில் தோல்வி
### மாணவி தற்கொலை

றக்குவானை, வெள்ளி

றக்குவானை மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி பிரேமாவதி என்பவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். மரண விசாரணையின்போது, இறந்தவர் ஒரு இளைஞனுடன் காதல் தொடர்பு வைத்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: சம்பவம் நடைபெற்ற தினத்தன்று மாலை, இறந்தவரும் ஒரு இளைஞரும் பிரேமாவதியின் வீட்டில் 'ஜாலி'யாகப் பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளைஞனின் தாயார், அந்த இடத்துக்குச் சென்று, பிரேமாவதியையும் அவரின் பெற்றோரையும் இழிவான வார்த்தைகளால் தூற்றிவிட்டு, தமது மகனைக் கூட்டிச் சென்றுவிட்டார். அதே தினத்தன்று இரவு பிரேமாவதி சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

மரண விசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பைசிக்கிள் திருடியவர்
### 3 மாத கடுழியச்சிறை

திருக்கோனமலை, வெள்ளி

திருக்கோனமலை நகரசபையைச் சேர்ந்த மேற்பார்வையாளர் ஒருவர்மீது, பைசிக்கிள் ஒன்றைத் திருடியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு திருமலை மாஜிஸ்டிரேட் திரு. எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை முடிவில், குற்றவாளியாகக் கண்ட மேற்பார்வையாளருக்கு, மாஜிஸ்டிரேட் மூன்றுமாதம் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்

## வீதி விபத்தில் இரு மாணவிகள்

இரத்தினபுரி, வெள்ளி

இரத்தினபுரி பப்டிஸ்ட் பாடசாலையைச் சேர்ந்த சுமணலதா (16 வயது), லலிதா (13 வயது) ஆகிய இரு மாணவிகள் பாடசாலையினின்றும் வீடு செல்லும் வழியில் மோட்டார் சைக்கிள் ஒன்றினால் தாக்கப்பட்டு படுகாயங்களுடன் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சைக்கிள் சாரதி உட்பட மூவரின் நிலைமையும் கவலைக்கிடமாகவிருக்கிறது.

## 'கிராமந்தோறும் பஞ்சாயத்து சபைகள் வேண்டும்'
### நல்லூரில் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்தெற்கு ஜனசமூகநிலையத்தின் 13-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. த.இராசரத்தினம் தலைமையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்நிலையக்கட்டடத்தில் நடைபெற்றது.

காரியதரிசி, தனாதிகாரி ஆகியோரால் ஆண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

தலைவர் தமது முன்னுரையில், பதினைந்து வருடங்களுக்கு முன் இந்த நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிராம பஞ்சாயத்துச் சபை செய்த பணிகளைச் சுட்டிக்காட்டி இப்படியான பஞ்சாயத்து சபைகளை இந்நாட்டில் ஒவ்வொரு கிராமங்களிலும் ஏற்படுத்தி மக்கள் தொண்டாற்ற பொது ஸ்தாபனங்கள் வழிசெய்ய வேண்டுமென்று கூறினர்.

புதுவருட உத்தியோகத்தர் தெரிவில் திரு. த. இராசரத்தினம் தலைவராகவும் திரு சி. வைத்திலிங்கம் உபதலைவராகவும் திரு. பொ. புண்ணியசிங்கம் காரியதரிசியாகவும் உபகாரியதரிசியாக திரு சு.துரைராசாவும் தனாதிகாரியாக திரு. இ. செல்வமாணிக்கராசாவும், உபதனாதிகாரியாக திரு. ம. சு. துரைராசாவும் கணக்குப் பரிசோதகராக திரு. பொ. கேசவநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். திருவாளர்கள் க. செல்லத்துரை, சி. க. செல்லத்துரை. சு. துரைராசா, சு முத்துராசா, அ. இரத்தினம், மா. நடராசா, செ. இராசலிங்கம், செ. சீவரத்தினம், ஆ. சண்முகலிங்கம், இ. செல்வராசா ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யபபட்டனர்.

## சுதந்திர தினம்
### ஐ. தே. கட்சி ஏற்பாடு

கொழும்பு, சனி

ஐக்கியதேசியக்கட்சி சுதந்திரதினத்தைக் கோட்டையில் வெகு விமரிசையாகக் கொண்டாடவிருக்கிறது. நுகேகொடை நகரசபைப் பூங்காவில் கொண்டாட்டங்கள் நடைபெறும். அன்று இரவு முழுவதும் "பிரித்" கிரியைகள் அனுஷ்டிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை இரவுஐக்கியசுதேசியக் கட்சியின் தலைவரான திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் ஒரு பகிரங்கக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

# குன்றக்குடி அடிகளார் பெப்ரவரியில் வரமாட்டார்
## நிகழ்ச்சிகள் பின்போடப்பட்டன

கிளிநொச்சி, வெள்ளி

தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் இலங்கைக்கு வருவது சில தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டிருப்பதாக சைவசித்தாந்த திருப்பணிக் கழகம்: அருள்நெறித் திருக்கூட்டம் ஆகியவற்றின் தலைவரான முதலியார் செ. சின்னத்தம்பி தெரிவித்துள்ளார். ஆகையால் குன்றக்குடி அடிகளார்பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்குவரமாட்டார். ஏப்ரல் மாதத்தில் வருமாறு முதலியார் செ. சின்னத்தம்பி கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இந்த மாற்றத்தினால் பின்வரும் விழாக்கள் பின்போடப்பட்டுள்ளன. கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் நடைபெறும் திருமுறை விழா, கரவெட்டியில் நடைபெறவிருந்த கந்தமுருகேசன் முத்தமிழ் விழா, திருகோணமலைதிருமுறைவிழா, மட்டக்களப்புதிருமுறைவிழா, நாவலப்பிட்டி திருமுறை விழா, கண்டி, மாத்தளை, பண்டாரவளை,குருநாகல் நீர்கொழும்பு, மன்னார் ஆகிய இடங்களில் சைவமகா சபைகளின் ஆதரவில் நடைபெறவிருந்த விழாக்கள்,யாழ்ப்பாணப் பகுதிகளில் கிளிநொச்சி, புங்குடுதீவு, வட்டுக்கோட்டை, கொழும்பு தமிழ்ச் சங்கம் முதலிய இடங்களில் நடைபெறவிருந்த இலக்கிய விழாக்கள் ஆதியனவாகும். இத்துடன் எட்டியாந்தோட்டை,மாத்தளை, மடுவகொல முதலிய இடங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர் மத்தியில் உள்ள நிகழ்ச்சிகள் முதலியன அடங்குமென்று குறிப்பிடத்தக்கது.

## ரொடியா வகுப்பினருக்குப் புதியகுடியேற்றத்திட்டம்

கொழும்பு, வெள்ளி

'ரொடியா' வகுப்பைச் சேர்ந்தவர்களைக் குடியிருத்துவதற்கென கொலாமுனு ஓயாவின் இடது பக்கமாக ஒரு புதிய குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. தேசிய சேவைத் திட்டத்தின் கீழ் இம்முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் 2 ஏக்கர் மலை நிலத்தையும், ஒரு ஏக்கர் நெல் நிலத்தையும் கொண்ட 50 குடியேற்றப் பகுதிகள் இத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

குடியேற்றத்திட்ட வேலைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குடியேறவிருக்கும் மக்களும், தொண்டர்களும் அரசாங்க பகுதியினருடன் கூடி வேலையிலீடுபட்டு வருகின்றனர்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் உதைபந்தாட்டச் சங்கச் சுற்றுப் போட்டியமைப்பின்கீழ் கச்சேரிக் கோஷ்டிக்கும் சுகாதார இலாகாவுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சுகாதார இலாகாவெற்றியீட்டியது. சுகாதார இலாகா ஒரு கோல்போட்டது. கச்சேரி ஒரு கோலும் போடவில்லை.

## வண. பிரேஸர் மரணத்துக்கு
### 2 நிமிட மௌன அஞ்சலி

பேராதனை,வெள்ளி

பேராதனை பயிற்சிக் கழகத்தை ஆரம்பித்து வைத்த வண. ஏ ஜி. பிரேஸர் சென்ற சனியன்று இங்கிலாந்தில் காலமாகியதை யொட்டி,பேராதனை பயிற்சிக் களத்தினர் இரு நிமிட மௌனம் அனுஷ்டித்தனர்.

பேராதனையில் பயிற்சிக் களம் நிறுவும் யோசனை 1904-ம் ஆண்டிலேயே வண. ப்ரேஸருக்குத் தோன்றியது. 1914-ம் ஆண்டு வரை கேம்பிறிட்ஜ், ஒக்ஸ்போர்ட், பல்கலைக் கழகங்களிலிருந்து ஆட்களைவரவழைத்து பயிற்சிக்களத்தை ஆரம்பித்துவைத்தனர்.

வண:பிரேஸர் தமது 88-வது வயதில் இங்கிலாந்தில் காலமார்.

## உதவிமேயர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

நுவரேலியா, வெள்ளி

நுவரேலியா மாநகரசபை உதவிமேயர் திரு. ஜே. டி. ஸ்ரீவர்த்தனமீது, நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கொண்டுவர மாநகரசபையிலுள்ள 10 அங்கத்தவர்களில் ஏழு அங்கத்தவர்கள் முடிவு செய்துள்ளனர். ஏழு அங்கத்தவர்களினாலும் அந்தத் தீர்மானம் கையொப்பமிடப்பட்டு மாநகரசபை கமிஷனர் திரு. பீலிக்ஸ் பெர்னாண்டோவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உதவிமேயர் திரு. ஜே. டி. ஸ்ரீவர்த்தன ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் சங்கத்தின் தலைவர்.

## கி. ச. தேர்தலில் 4 பேர் கைது

கொழும்பு, வெள்ளி

கனுவற கிராமக் கமிட்டியின் தேர்தலுக்குப் பின்னர் பல இடங்களிலும் சச்சரவுகள் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. இதுசம்பந்தமாக பொலிஸார் 4 பேரைக் கைது செய்துள்ளனர்.

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

●

யாழ்ப்பாணம் மனோகரா என். டி. ராமராவ், சாவித்திரி நடித்த சந்திரஹாரம் (தமிழ்)

●

சாவகச்சேரி தேவேந்திரா ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு தமிழ்) பேசும் படம்.


3வது வெற்றி வாரம் !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வைபிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) திரொளி (நுவரெலியா) ஜெமினி (ராகல)

பெண்மையின் நிறைவு!
தாய்மையின் பரிவு! தன்மானத் துணிவு!
பாசத்தின் விளைவு! தியாகத்தின் முடிவு!
இத்தனைக்கும் நடுவே தத்தளித்து வெற்றி காணும்
உத்தமியின் காவியம்!
இன்றே பாருங்கள்!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா யாழ்ப்பாணம்
சனி, ஞாயிறு, மாலை 6-30 மணிக்கு மட்டும்
சிவாஜி கணேசன் நடித்த
பாசமலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
என். டி. ராமராவ், சாவித்திரி
நடித்த
சந்திரஹாரம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.